# வலம்புரி

Valampurii

பக்கங்கள்: ஆறு

சங்கு 08 வள்ளுவர் ஆண்டு 2038 ஆனி 28 வியாழக்கிழமை (12.07.2007) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 205



SATS TECH

யாழ். நகரின் முன்னனி Satellite & Cable TV நிறுவனம்

DIAL 024 222 5908


## முல்லைத்தீவில் கிபீர் தாக்குதல் சிறுவன் உட்பட இருவர் பலி

### மேலும் பதினொரு பேர் படுகாயம்

(கிளிநொச்சி)

முல்லைத்தீவு அளம்பிலில் விமானப் படைக்குச் சொந்தமான கிபீர் ரக விமானங்கள் நேற்று நடத்திய குண்டுவீச்சில் சிறுவன் உட்பட அப்பாவிப் பொதுமக்கள் இருவர் கொல்லப்பட்டனர்.

ஒருவயது குழந்தை உட்பட அப்பாவிப் பொதுமக்கள் 11 பேர் படுகாயமடைந்துள்ளனர். முல்லைத்தீவுக்குத் தெற்காகவுள்ள அளம்பில் இராமசாமித்தோட்டம் பகுதியில் வேளாங்கண்ணி தேவாலயத்திற்கு முன்பாகவுள்ள மீன்வாடிகள் (06 ஆம் பக்கம் பார்க்க)

## இந்தியாவின் உதவி அவசர தேவை ம.ம.முன்னணித் தலைவர் கோரிக்கை

(சென்னை)

இலங்கை இனப்பிரச்சினை தீவிரமடைந்துள்ளதால் இந்தியாவின் உதவி அவசரத் தேவையாகவுள்ளது என்று மலையக மக்கள் முன்னணியின் தலைவரும் அமைச்சருமான பெ.சந்திரசேகரன் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் கூறியதாவது, பல முனை நெருக்கடிகளுக்கு மத்தியில் அரசியல் நிச்சியமற்ற தன்மையை நோக்கி இலங்கை சென்று கொண்டிருக்கின்றது.

மனித உரிமை விடயத்தில் எமது நாட்டின் மீது சர்வதேச சமூகம் கூர்மையான பார்வையை செலுத்தி வருகின்றது. அதற்கு ஏற்றால் போல் ஆட்கடத்தல்களும் உயிரிழப்புக்களும் நின்றபாடில்லை.

இவையாவும் இலங்கையின் எதிர்கால வளர்ச்சிக்கு எம்போன்ற சிறுபான்மையினங்களின் சுமுகமான (06 ஆம் பக்கம் பார்க்க)

# கிழக்கு மாகாணம் முழுவதும் அரசின் பூரண கட்டுப்பாட்டில்!

## ஜனாதிபதி செயலகம் அறிவிப்பு

(கொழும்பு)

தொப்பிக்கல (குடும்பிமலை) பிரதேசத்தை இராணுவம் நேற்றுக் காலை தமது பூரண கட்டுப்பாட்டிற்குள் கொண்டு வந்துள்ளதாக ஜனாதிபதி செயலகம் அறிவித்துள்ளது. இத் தாக்குதல் மூலம் கிழக்கு மாகாணம் முழுவதும் தமது கட்டுப்பாட்டிற்குள் கொண்டு வரப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது. (06 ஆம் பக்கம் பார்க்க)

## நிலப்பரப்பைக் கைப்பற்றுவதன் மூலம் இனப்பிரச்சினை தீர்ந்து விடாது

### ரொய்ட்டர் சுட்டிக்காட்டு

(கொழும்பு)

நிலப்பரப்பைக் கைப்பற்றுவதன் மூலமாக இலங்கையின் இனப்பிரச்சினை தீர்ந்து விடாது என ரொய்ட்டர் ஊடகம் சுட்டிக்காட்டியுள்ளது. அரசாங்கம் தமது படைகள் தொப்பிக்கலப் பிரதேசத்தைக் கைப்பற்றியுள்ளதாக அறிவித்துள்ள நிலையில் அதுகுறித்து ரொய்ட்டர் நிறுவனம் செய்திக் குறிப்பொன்றை வெளியிட்டுள்ளது.

கடந்த 2 தசாப்தங்களாக தொடரும் இலங்கையின் மோதல் நிலையில் பல்வேறு சந்தர்ப்பங்களில் (06 ஆம் பக்கம் பார்க்க)


## விடுதலைப்புலிகளுடன் நோர்வேத் தூதுவர் பேச்சு

(கிளிநொச்சி)

தமிழீழ விடுதலைப்புலிகளின்அரசியல் துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வனை இலங்கைக்கான நோர்வேத் தூதுவர் ஹான்ஸ் பிரட்ஸ்கர் நேற்றுச் சந்தித்துப் பேசினார்.

வவுனியா ஓமந்தை ஏ-9 பாதையூடாக காலை10.30 மணியளவில் கிளிநொச்சியை ஹான்ஸ் பிரட்ஸ்கர் சென்றடைந்தார். விடுதலைப்புலிகளின் அரசியல்துறை நடுவகப்பணியகத்தில் முற்பகல் 11 மணிக்கு சு.ப.தமிழ்ச்செல்வனுக்கும் ஹான்ஸ் பிரட்ஸ்கருக்குமிடையிலான சந்திப்புத் தொடங்கியது.

இச் சந்திப்பு பிற்பகல் 12.30 மணிவரை நடைபெற்றதாக விடுதலைப்புலிகளின்சமாதானச் செயலகம் தெரிவித்துள்ளது. இச் சந்திப்பில் தமிழீழக் காவல்துறைப் பொறுப்பாளர் பா.நடேசன், இராணுவப் பேச்சாளர் இராசையா இளந்திரையன், சமாதானச் செயலகப் பணிப்பாளர் சீ.புலித்தேவன், மனித உரிமைகள் விவகாரங்களுக்கான பேச்சாளர் (06 ஆம் பக்கம் பார்க்க)



## தொப்பிக்கலவிலுள்ள மக்களை மீட்க முடியாதது விடுதலைப்புலிகளுக்கு ஏற்பட்ட பின்னடைவு

### இளந்திரையன் பி.பி.ஸிக்குப் பேட்டி

(கிளிநொச்சி)

தொப்பிகலவிலுள்ள எமது மக்களை இராணுவத்தின் கட்டுப்பாட்டிலிருந்து எங்களால் மீட்க முடியவில்லை என்ற வகையில் அது ஒரு பின்னடைவுதான் என விடுதலைப் புலிகளின் இராணுவப் பேச்சாளர் இ.இளந்திரையன் தெரிவித்துள்ளார்.

தொப்பிக்கல பகுதி இராணுவத்தின் கட்டுப்பாட்டினுள் வந்துள்ளமை குறித்து அவர் பி.பி.ஸியின் கொழும்புச் செய்தியாளர் றொசான் பேர்ட்றகு கருத்துத் தெரிவித்த போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து கூறியதாவது,

*கேள்வி:-* தொப்பிக்கலவை இராணுவம் கைப்பற்றியுள்ளமை குறித்து?

*பதில்:-* இராணுவம் இதனை கிழக்கில் நடத்துகின்ற போரின் முடிபு என்று கூறுகின்றார்கள். (06 ஆம் பக்கம் பார்க்க)

## கடத்தப்பட்ட குடும்பஸ்தர் நேற்றுச் சடலமாக மீட்பு

(யாழ்ப்பாணம்)

இருபாலையில் நேற்று முன்தினம் நள்ளிரவு கடத்தப்பட்ட குடும்பஸ்தர் நேற்றுக் காலை கல்வியங்காடு ஆடியபாதம் வீதியில் சூட்டுக்காயங்களுடன் சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

சம்பவத்தில் இருபாலை விநாயகர் வீதியைச் சேர்ந்த தச்சுத்தொழிலாளியும் 2 பிள்ளைகளின் தந்தையுமான சிவநாதன் வசீகுமார் (வயது-29) என்ற குடும்பஸ்தரே கடத்தப்பட்டுக் கொல்லப் (06 ஆம் பக்கம் பார்க்க)

## தொப்பிக்கல வெற்றி நிகழ்வு தற்காலிகமாக ஒத்திவைப்பு

தொப்பிக்கல வெற்றியை கொண்டாடும் முகமாக எதிர்வரும் 19 ஆம் திகதி ஏற்பாடு செய்யப்பட்ட நிகழ்வு ஒத்திவைக்கப்பட்டுள்ளதாகத் தெரியவந்துள்ளது.

இராணுவத் தளபதி சரத் பொன்சேகாவின் வேண்டுகோளின் பேரிலேயே இந்த நிகழ்வு ஒத்திவைக்கப்பட்டுள்ளது. பொது நிர்வாக அலுவல்கள் அமைச்சு ஏற்பாடு செய்துள்ள இந்த நிகழ்வில் அனைத்து அரசியல் கட்சிகளின் தலைவர்களுக்கும் அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது. தொப்பிக்கலப் பகுதியை அரசாங்கப் படைகள் கைப்பற்றியதை மிகப் பெரிய இராணுவ வெற்றியாகக் கொண்டாடுவதற்கு அரசாங்கம் தயாராகி வருகின்றது. (ச-5)

## பேச்சுக்களை மீள ஆரம்பிக்க நோர்வே ஆர்வமாகவுள்ளது

### நோர்வேத் தூதுவர் பிரட்ஸ்கர் தெரிவிப்பு

(கொழும்பு)

அரசுக்கும் விடுதலைப்புலிகளுக்கும் இடையிலான பேச்சுவார்த்தைகளை மீண்டும் ஆரம்பிப்பது குறித்து நோர்வே ஆர்வமாகவுள்ளதாக இலங்கைக்கான நோர்வேத் தூதுவர் ஹான்ஸ் பிரட்ஸ்கர் தெரிவித்தார்.

விடுதலைப்புலிகளுடனான சந்திப்பின் பின் நேற்றுக் (06 ஆம் பக்கம் பார்க்க)


நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

# சட்டவிரோதமாக ஆட்கடத்தலில் ஆசியாவில் இலங்கைக்கு முதலிடம்

(கொழும்பு)

வெளிநாடுகளுக்கு சட்டவிரோதமாக ஆட்களை கடத்துவதில் இலங்கை ஆசியாவில் முதலிடம் வகிப்பதாக ஆய்வு ஒன்று தெரிவித்துள்ளது. குடிவரவு, குடியகல்வு சட்டங்களை முறையாக அமுல்படுத்தாமை மற்றும் அதிகார துஷ்பிரயோகமே இதற்கு காரணமென சட்ட வல்லுநர்கள் தெரிவித்துள்ளனர்.

சட்ட விரோத ஆட்கடத்தல் மற்றும் குடியேற்ற நடவடிக்கைகள் அதில் உள்ள ஆபத்துக்கள் தொடர்பான ஊடகவியலாளர்களுக்கு விளக்கமளிக்கும் கலந்துரையாடலை சர்வதேச குடியேற்ற ஸ்தாபனம் கொழும்பு றேனுகா ஹோட்டலில் நடத்திய இந்த நிகழ்விலேயே மேற்படி தகவல் தெரிவிக்கப்பட்டது.

இந்தியா, பாகிஸ்தான், சீனா, பங்களாதேஷ் உள்ளிட்ட ஆசிய நாடுகளில் இருந்தும் சில ஆபிரிக்க நாடுகளில் இருந்தும் பெருந்தொகையானோர் ஐரோப்பிய நாடுகளில் சட்டவிரோதமாக குடியேறுவதற்கான தளமாக இலங்கையை பயன்படுத்துகின்றனர்.

ஆபத்தான கடற்பயணத்தை மேற்கொண்டு இவர்கள் ஐரோப்பிய நாடுகளுக்கு குடியேற முயல்கின்றனர். அத்தோடு பெருந்தொகையானோர் வீட்டுப் பணிப்பெண்களாகச் செல்கின்றனர்.

சட்டவிரோத குடியேற்றவாசிகள் எதிர்நோக்கும் பிரச்சினைகள், பாதுகாப்பற்ற தன்மை, ஆபத்துக்கள் தொடர்பாக மக்கள் போதிய அறிவும் விளக்கமும் இன்றியுள்ளனர் என இக் கலந்துரையாடலில் நிபுணர்கள் சுட்டிக்காட்டினர். (ச-5)

# அரசாங்க சேவை உத்தியோகத்தர்கள் தனித்தனி மாகாண சேவைக்கு உள்ளீர்ப்பு

வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்கள் இரண்டாகப் பிரிக்கப்பட்டு நிருவாக நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டதையடுத்து அரசாங்க சேவை உத்தியோகத்தர்களை தனித்தனி மாகாண சேவைக்கு உள்ளீர்ப்புச் செய்யும் நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

உள்ளீர்ப்பு நடவடிக்கைகளை விரைவாக செய்து முடிப்பதற்கு போதுமான உத்தியோகத்தர்கள் இல்லாத காரணத்தால் தாமதம் ஏற்பட்டுள்ளதாக கிழக்கு மாகாண பொது சேவை ஆணைக்குழுவின் செயலாளர் கே.உடகே தெரிவித்தார்.

வடக்கு மற்றும் கிழக்கு மாகாண சேவையில் இருந்து ஓய்வு பெறும் உத்தியோகத்தர்களுக்கு புதிய உள்ளீர்ப்புக் கடிதம் இதுவரை வழங்கப்படாததால் ஓய்வூதியத்தை பெற்றுக் கொள்ள முடியாத நிலை ஏற்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இது தொடர்பாக மாகாண பொதுச்சேவை ஆணைக்குழுவின் கவனத்திற்கு கொண்டு வரப்பட்டுள்ளது.

இதனைத் தொடர்ந்து தற்போது சேவையில் இருந்து ஓய்வு பெறும் உத்தியோகத்தர்களின் உள்ளீர்ப்பு நடவடிக்கைகளை முன்னுரிமை அடிப்படையில் மேற்கொள்வதற்கு கிழக்கு மாகாண பொதுச் சேவை ஆணைக்குழு தீர்மானித்துள்ளது. (எ-1)

## புத்தகக் கண்காட்சி

(யாழ்ப்பாணம்)

உள்ளூராட்சி வாரத்தை முன்னிட்டு நல்லூர் பிர தேசசபை நடாத்தும் புத்தகக் கண்காட்சி நாளையும் நாளை மறுதினமும் கொக்குவில் பொதுநூலகத் தில் காலை 9 மணி தொடக்கம் மாலை 4 மணிவரை நடைபெறும்.

அத்துடன் டெங்குநோய், சிக்கின்குனியா நோய் தொடர்பான கருத்தரங்கு நாளை மறுதினம் காலை 9 மணிக்கு கோண்டாவில் மத்திய மருந்தகத்தில் நடைபெறவுள்ளது. (ச)

# குடும்பிமலை மரங்களை வெட்டி இலாபம் சம்பாதிப்பார் ஜனாதிபதி

## ஐ.தே.க. தலைவர் ரணில் சாடல்



(கொழும்பு)

குடும்பிமலை என்னும் காட்டுப்பகுதியை கைப்பற்றிவிட்டு அதற்காக ஒரு வெற்றி விழா நடத்துவதா? குடும்பிமலை மரங்களை வெட்டிவிற்று லாபம் சம்பாதிக்க குடும்பிமலை மர நிறுவனம் தொடங்குவார் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ என்று இலங்கையின் பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய தேசியக்கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்க சாடியுள்ளார்.

காலியில் நடைபெற்ற நிகழ்ச்சி ஒன்றில் அவர் பேசியதாவது, மகிந்தவின் சட்டத்தரணி எனக்கு அனுப்பிய கடிதத்தில் 200 கோடி ரூபா நட்டஈடுகோரியுள்ளார். என்மீது மகிந்த பொய்க்குற்றச்சாட்டை சுமத்துகிறார். ஆனால் புலிகளுக்கு அவர் நிதிவழங்கியமை உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

இந்தக் கொடுக்கல் வாங்கல்களில் பி.பி.ஜெயசுந்தர மற்றும் பசில் ராஜபக்ஷ ஆகியோர் சம்பந்தப்பட்டுள்ளனர். மொத்தமாக 150 கோடி ரூபா பணம் புலிகளுக்கு வழங்கப்பட்டதாக மங்கள தெரிவித்துள்ளார்.

இது தற்போது உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. மக்களிடம் இருந்து பெருமளவான பணத்தை அரசாங்கம் கடத்தல் சம்பவங்கள் மூலம் அறவிட்டு வருகிறது. ஊழல், தரகு மூலமாகவும் மக்கள் பணத்தை அரசு சுரண்டுகிறது. இதனால் மக்கள் அவதிப்படுகின்றனர்.

இந்நிலையில் குடும்பிமலை வெற்றியைக் கொண்டாடி அங்குள்ள மரங்களை வெட்டி பணம் சம்பாதிக்க மகிந்த சகோதர நிறுவனம் முயல்கிறது. கோத்தபாய ஆயுதங்களைக் கொள்வனவு செய்கிறார். இதன் மூலம் லாபமடையும் மகிந்த சகோதர நிறுவனம் இனிமேல் குடும்பிமலை மரங்களை விற்று லாபமடையும்.

எதிர்காலத்தில் குடும்பிமலை மர நிறுவனம் என்று ஒன்று உருவாக்கப்பட்டால் அது கூட ஆச்சரியப்படமுடியாது. நாட்டைச் சுடுகாடாக்கியுள்ள அரசாங்கத்தின் வெற்றிகளைக் கொண்டாட ஐக்கிய தேசியக்கட்சி ஒருபோதும் தயார் இல்லை. ஒரு காட்டுப் பிரதேசத்தை கைப்பற்றி விட்டு அதனை ஒரு மிகப்பெரிய வெற்றியாகக்காட்ட அரசாங்கம் முனைகிறது என்றார். (ச-5)

## ஓட்டமாவடியில் வைத்து முஸ்லிம் இளைஞன் சுட்டுக்கொலை

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு ஓட்டமாவடியில் இராணுவ முகாமிற்கு அண்மையில் நேற்றுக் காலை 11.40 மணியளவில் முஸ்லிம் இளைஞர் ஒருவர் சுட்டுக்கொலை செய்யப்பட்டார்.

சுட்டுக்கொல்லப்பட்டவர் ஓட்டமாவடியைச் சேர்ந்த மீரா சாகி நசூர்தின் (வயது 27) எனத் தெரியவந்துள்ளது.

ஓட்டமாவடி பாலத்திற்கு அருகில் அமைந்துள்ள இராணுவக் காவல்ரணுக்கு அண்மையிலேயே இச் சம்பவம் நடந்துள்ளது. (ச-5)

# வட மாகாண பொதுச் சேவை ஆணைக்குழு ஏனையவை போன்று செயற்பட வேண்டும்

## ஆளுநரிடம் தமிழர் ஆசிரியர் சங்கம் கோரிக்கை

(கொழும்பு)

வடமாகாண பொதுச் சேவை ஆணைக்குழு நாட்டின் ஏனைய மாகாண பொதுச் சேவை ஆணைக்குழு போன்று நடைமுறையைப்பின்பற்றி சிறப்பாக இயங்கவேண்டும். இவ்வாறு வட மாகாண ஆளுநர் மொஹான் சமரசேகரவிடம் இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கம்வேண்டுகோள் விடுத்துள்ளது. வட மாகாணத்தில் பத்தாயிரம் தமிழ் ஆசிரியர்கள் உள்ளனர். அங்கிருந்து மருத்துவ சிகிச்சை, சேவை மூப்பு, பிந்தியவயதுத் திருமணம் போன்ற பல்வேறு காரணங்களில் வேறு மாகாணங்களுக்குச் செல்லசுமார் 100 ஆசிரியர்கள் விண்ணப்பிக்கின்றபோது வட மாகாண பொதுச்சேவை ஆணைக்குழுத் தலைவரால் இக் கோரிக்கைகள் நிராகரிக்கப்படுவதாக ஆசிரியர்கள், தமிழர் ஆசிரியர் சங்கத்திடம் முறையிட்டுள்ளனர். இது தொடர்பாக சங்கப் பொதுச் செயலாளர் த.மகாசிவம் வட மாகாண ஆளுநருக்கு கடிதமொன்றின் மூலம் இப்பிரச்சினையைத் தீர்க்குமாறும் வெகுவிரைவில் நேரடியாகச் சந்தித்து பேசவிருப்பதாகவும் கூறியுள்ளார். (ச-5)

## இராசிபலன்

12.07.2007

(ஆனி 28, வியாழக்கிழமை)

திரயோதசி முன்னிரவு 9.23 மணிவரை

ரோகிணி முற்பகல் 07.00 மணிவரை

இராகுகாலம் 01.29-02.59 மணிவரை

சுபநேரம் 07.29-08.59 மணிவரை

பிரதோச விரதம்

| | |
|---|---|
| மேடம்:- | பெரியோர் உதவி, தொழில் சிந்தை, விவாதம், முயற்சி தாமதம். |
| இடபம்:- | தேகநலன், கௌரவமான நிலை, ஆழ்ந்த சிந்தை, நண்பர்கள் உதவி. |
| மிதுனம்:- | கோபப்படுதல், தொழில் மந்தநிலை, காரிய அலைச்சல், சுபசெலவு. |
| கடகம்:- | பெருமையடைதல், காரிய நன்மை, உறவினர் வருகை, விருந்துபசாரம். |
| சிங்கம்:- | கடின உழைப்பு, தூரதேசச் செய்தி, பிறர் உதவி, சுபநிகழ்ச்சி. |
| கன்னி:- | ஆன்றோர் ஆசி, புதிய திட்டமிடல், ஆரோக்கியக்குறைவு, வீண் பயம். |
| துலாம்:- | வீண்தொல்லை, உடல் நலக்குறைவு, வேலைச்சுமை, மரியாதைக்குறைவு. |
| விருச்சிகம்:- | அபூர்வ சந்திப்பு, திடீர் பயணம், பண வருவாய், முயற்சி கைகூடும். |
| தனுசு:- | சுகவாழ்வு, செய்தொழில் விருத்தி, சுவாரஸ்யம், முயற்சி கைகூடும். |
| மகரம்:- | குடும்பக்கவலை, காரிய தாமதம், பூர்வ புண்ணிய கருமம், கௌரவக்குறைவு. |
| கும்பம்:- | புதிய விடயம், அற்பர் உறவு, வாகன சுகம், முயற்சி தாமதம். |
| மீனம்:- | கூட்டு முயற்சி, அந்நியர் சந்திப்பு, வாக்கு மேன்மை, பண வருவாய். |

-வளவன்

# வடக்கு அல்லது தெற்கு நோக்கி புலிகளின் தாக்குதல் தொடரலாம்?

## கொழும்பு ஊடகம் ஆரூடம்

(கொழும்பு)

அரசாங்கம் தனது முழுமையான படை பலத்தையும் கிழக்கில் மையப்படுத்தியுள்ள நிலையில் விடுதலைப்புலிகள் வடக்கில் அல்லது தெற்கில் பாரிய படை நடவடிக்கை ஒன்றை மேற்கொள்வதற்கான சாத்தியங்கள் அதிகரித்துள்ளதாக படைத்துறை ஆய்வாளர்களை மேற்கோள்காட்டி ஆங்கில ஊடகமொன்று செய்தி வெளியிட்டுள்ளது.

மகிந்த ராஜபக்ஷவும் அவருடைய படைத்துறை ஆலோசகர்களும் விடுதலைப்புலிகளின் தாக்குதல் உத்திகள் குறித்து பூரண அனுபவமற்றவர்களாக இருப்பதாகவும் அந்த ஊடகம் சுட்டிக்காட்டியுள்ளது.

இராணுவ ரீதியில் முக்கியத்துவம் அற்ற நிலப்பரப்பை கைப்பற்றுவதற்கு படையினர் மேற்கொண்டு வரும் பாரிய படை நடவடிக்கை குறித்து கடுமையான விமர்சனங்கள் எழுந்துள்ளன.

தொப்பிக்கலயில் விடுதலைப்புலிகளின் மரபுவழித்தாக்குதல் அணிகள் எவையும் நிலைகொண்டிருக்கவில்லை என்றும் அவர்களின் கரந்தடிப்படையணியே தாக்குதல் நடாத்தி வருவதாகவும் குறிப்பிட்டுள்ளது.

கரந்தடிப்படையின் சில உறுப்பினர்களை தொப்பிக்கலயிலிருந்து வெளியேற்றுவதற்கு இராணுவம் பாரிய படை நடவடிக்கைகளை மேற்கொள்வது அவர்களின் அனுபவமின்மையின் வெளிப்பாடே என்று இராணுவ ஆய்வாளர் ஒருவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

யாழ்.குடாநாட்டை 1995 ஆம் ஆண்டு முழுமையாக கைப்பற்றியதாக அரசாங்கம் அறிவித்து பெருமெடுப்பிலான வெற்றி விழாவினை நடாத்தியிருந்தது. எனினும் இன்றுவரை யாழ். குடா நாட்டில் விடுதலைப்புலிகள் மேற்கொள்ளும் தாக்குதல்களை படையினரால் தடுக்கமுடியவில்லை.

மக்கள் செறிவுமிக்க கரந்தடித் தாக்குதலுக்கோ தற்காலிக தங்குமிட அமைத்தலுக்கோ ஏதுவற்ற யாழ். குடாநாட்டிலேயே விடுதலைப்புலிகளால் படையினருக்கு எதிரான தாக்குதல்களை வெற்றிகரமாக நடத்த முடியுமாயின் கிழக்கு மாகாணத்தில் அதனை விட மோசமான தாக்குதல்களை விடுதலைப் புலிகளால் மேற்கொள்ளமுடியும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. காடுகள் நிறைந்து முழுமையாக அரச படைகளால் கண்காணிப்பிற்கு உட்படுத்தப்பட முடியாதஊடகதொடுப்புக்கள் மிக்க கிழக்கு மாகாணத்தில் விடுதலைப்புலிகளின் தாக்குதல்களை முற்றாக தடுப்பதற்கு அரசாங்கப்படைகளால் முடியாது என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது.

கிழக்கு மாகாணத்தின் முழுமையானகட்டுப்பாட்டை அரசாங்கம் கொண்டிருப்பது விடுதலைப் புலிகளை பலவீனப்படுத்தும் என்ற எண்ணம் தவறானது. விடுதலைப்புலிகள் 1995 ஆம் ஆண்டு அவர்களின் கோட்டையாக கருதப்பட்ட யாழ். குடாநாட்டை விட்டு வெளியேறிய பின்னரே படைகளின் வரலாற்றில் பாரிய இழப்புக்களைச் சந்திக்கும் வகையிலான தாக்குதல்களை மேற்கொண்டிருந்தனர்.

நிலப்பரப்பின் ஆளுகைகளை கைப்பற்றுவதன் மூலமாகவோ குறிப்பிட்ட பிரதேசத்தில் அகலக் கால்பரப்பி நிற்பதன் மூலமாகவோ யுத்தத்தின்போக்கை மாற்றிவிட முடியாது என்ற வரலாற்று உண்மையை அரசாங்கம் கற்றுக்கொள்ளவேண்டியுள்ளது.

யுத்த நடவடிக்கைகள் இலங்கைக்கு பாரிய பொருளாதார சுமையை அதிகரிக்கச் செய்யும் அதேவேளை படையினர் சந்திக்கும் இழப்புக்கள் அரசியல் ரீதியில் பல்வேறு நெருக்கடிகளை ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவிற்கு ஏற்படுத்தும் என்றும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

விடுதலைப்புலிகளினால் மிகக்குறைந்த இழப்புக்களோடு இலங்கையின் பொருளாதாரத்தை ஆட்டம் காணச்செய்யமுடியும் என்பதால் யுத்தத்தின் மூலம்தான் பிரச்சினைக்குத் தீர்வு என்ற நிலைப்பாட்டை மகிந்த ராஜபக்ஷ மாற்றிக்கொள்ளாவிட்டால் மீட்க முடியாத பாதாளத்திற்குள் இலங்கை விழுந்துவிடும் என்றும் எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

இதேவேளை அடுத்துவரும் நாட்களில் விடுதலைப்புலிகளின் பதில் தாக்குதலின் விளைவுகளை முழுமையாக அரசாங்கம் அனுபவிக்கும் என்றும் ஆய்வாளர்கள் எதிர்வுகூறியுள்ளதாக அந்தச் செய்தியில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச-5)

# றோயல் கல்லூரி கொழும்பு – 7
## க.பொ.த. (உயர்தர) முன்னோடிப் பரீட்சை ① ஜுலை 2007

இரசாயனவியல் – I | நேரம் – 2 மணித்தியாலயம்

(நேற்றைய தொடர்ச்சி.....)

29. பின்வருவனவற்றில் எதில் $NaHSO_4$ உப்பு உருவாகும்.
(1) NaOH கரைசலுக்கு துளித்துளியாக $H_2SO_4$ சேர்த்தல்
(2) NaOH கரைசலுக்கு துளித்துளியாக மிகையான $H_2SO_4$ சேர்த்தல்
(3) $H_2SO_4$ கரைசலுக்கு துளித்துளியாக NaOH சேர்த்தல்
(4) $H_2SO_4$ கரைசலுக்கு துளித்துளியாக மிகையான NaOH கரைசல் சேர்த்தல்
(5) (1) இனாலும் (4) இனாலும்

30. NO(g) உம் $Cl_2(g)$ உம் தாழ் வெப்பநிலைகளில் தாக்கம்புரிந்து NOCl ஐ உருவாக்கும்.

$$2\,NO(g)+Cl_2(g) \longrightarrow 2NOCl(g)$$

குறித்த தாழ் வெப்பநிலையில் NO(g) இனதும் $Cl_2(g)$ இனதும் வேறுபட்ட ஆரம்பக் கனவளவுகளில் NOCl(g) இன் ஆரம்பத் தோன்றல் வீதங்கள் கீழே அட்டவணையில் தரப்பட்டுள்ளது.

| ஆரம்பசெறிவு/ $moldm^{-3}$ NO(g) | ஆரம்பசெறிவு/ $moldm^{-3}$ $Cl_2(g)$ | NOCl இன் ஆரம்பத் தோன்றல் வீதம்/ $moldm^{-3}S^{-1}$ |
|---|---|---|
| 0.02 | 0.02 | 0.094 |
| 0.02 | 0.04 | 0.190 |
| 0.04 | 0.04 | 0.758 |

மேற்படி தாக்கத்தின் வரிசை பற்றிய பின்வரும் கூற்றுக்களில் சரியானது
1) NO(g) சார்பாக முதலாம் வரிசையும் $Cl_2(g)$ சார்பாக இரண்டாம் வரிசையும் ஆகும்.
2) NO(g), $Cl_2(g)$ ஆகியவை சார்பாக இரண்டாம் வரிசையாகும்.
3) மொத்தத் தாக்கவரிசை 3 ஆவதுடன் தாக்கம் குறைந்தது இரண்டுபடிகளில் நடைபெறும்.
4) இது மூன்றாம் வரிசை ஒருபடித் தாக்கமாகும்.
5) இது இரண்டாம் வரிசை ஒருபடித் தாக்கமாகும்.


31. செப்பு மின்வாய்களைப் பயன்படுத்தி $CuSO_4$ நீர்க்கரைசலானது மின்பகுக்கப்பட்டது. IA மின்னோட்டம் ts இற்கு இக்கரைசலினூடு செலுத்தப்பட்ட போது மின்வாயில் வெளியேற்றப்பட்ட Cu இன் திணிவு mg ஆகும். இலத்திரனின் ஏற்றம் e c அவகாதரோ மாறிலியின் பெறுமானம் ($mol^{-1}$) (Cu=63.5)

1) $\frac{63.5It}{me}$ 2) $\frac{63.5It}{2me}$ 3) $\frac{me}{2x63.5It}$ 4) $\frac{2me}{63.5It}$ 5) $\frac{me}{63.5It}$

32. $I_2(g)+3Cl_2(g) \longrightarrow 2ICl_3(s)$
மேலேயுள்ள தாக்கத்தின் நியம வெப்பவுள்ளுறை மாற்றத்தை துணிவதற்கு தேவையான தரவு
(a) $I_2$ இன் நியம பதங்கமாதல் வெப்பவுள்ளுறை
(b) குளோரினின் நியம அணுவாதல் வெப்பவுள்ளுறை
(c) குளோரினின் நியம இலத்திரன் நாட்ட வெப்பவுள்ளுறை
(d) $ICl_3(s)$ இன் நியமத் தோன்றல் வெப்பவுள்ளுறை
(1) a யும், b யும் (2) a யும், b யும், d யும் (3) a யும், b யும்
(4) a யும், b யும், c யும், d யும் (5) a யும், c யும், d யும்


33. பின்வரும் எந்த ஒழுங்கு தரப்பட்ட சேர்வைகளின் கொதிநிலை அதிகரிக்கும் ஒழுங்கை சரியாக குறித்து நிற்கிறது.
(1) $CH_3CH_2OH<CH_3OCH_3<CH_3CH_2OCH_3<CH_3CH_2OH$
(2) $CH_3COCH_3<CH_3CH_2CH_2OH<CH_3CH_2CHO<CH_3CH_2COOH$
(3) $CH_3COCl<CH_3COOCH_2CH_3<CH_3COOH<CH_2ClCOOH$
(4) $CH_3CH(CH_3)CH_3<CH_3COOH<CH_3COOCH_3<CH_3CH_2COOH$
(5) $CH_3CH_2Cl<CH_3COCH_3<CH_3COOH<CH_3CH(CH_3)CH_2OH$

34. தாக்கமொன்றின் சக்திமட்ட–தாக்கப்பாதை வரைபடம் வலப்புறம் தரப்பட்டுள்ளது.




பிற்தாக்கத்தின் ஏவற் சக்தி
1) a 2) b 3) a-b 4) b-a 5) a+b

35.




இடப்புறமுள்ள படம் ஏகார் ஊடகத்தில் தூய இரும்பு ஆணி வைக்கப்பட்டு மூன்று இடத்தில் A,B,C எனப் பெயரிடப் பட்டுள்ளதைக் காட்டுகின்றது. மேலே உள்ள தொகுதியைப் பற்றிய பின் வரும் கூற்றுகளில் சரியானது.
1) இலத்திரன் A யில் இருந்து B ஐ நோக்கி பாயும்
2) அனோட்டுத் தாக்கம் B யில் நடப்பதுடன் இதைச் சுற்றி நீலநிறம் தோன்றும்.
3) A யில் தாக்கம் $2H_2O+O_2+4e \longrightarrow 4OH^-$ நடைபெறும்
4) B யில் கதோட்டுத் தாக்கம் நடைபெறுவதுடன் இதைச் சுற்றி மென்சிவப்பு நிறம் தோன்றும்
5) இலத்திரன் பாய்ச்சல் C யில் இருந்து B யிற்கும், C இல் இருந்து A யிற்கும் நடைபெறும்.

36. 27°C இலும் X அமுக்கத்திலும் $Vdm^3$ பாத்திரம் ஒன்று 0.6mol P(g) ஐயும் 0.8mol Q(g) ஐயும் கொண்டுள்ளது. தொகுதியானது 27°C இற்கு வெப்பப்படுத்திய போது பின்வரும் சமநிலை அடைந்தது.

$$P(g)+Q(g) \rightleftharpoons R(g)+S(g)$$

சமநிலையில் 0.4mol R(g) காணப்பட்டது. சமநிலையில் தொகுதியில் P(g) இன் பகுதி அமுக்கம் (எல்லா வாயுக்களும் இலட்சிய நடத்தையை உடையன)
1) $\frac{5X}{21}$ 2) $\frac{10X}{21}$ 3) $\frac{3X}{35}$ 4) $\frac{6X}{35}$ 5) $\frac{X}{7}$

37. 27°C இல் $N_2(g)$ மாதிரியின் வேக வர்க்கச் சாரி வர்க்க மூலம் (N=14)
1) $516\,ms^{-1}$ 2) $51.6ms^{-1}$ 3) $0.516ms^{-1}$ 4) $5160\,ms^{-1}$ 5) $5.16ms^{-1}$

38. பின்வரும் வரிசைகளில் தரப்பட்ட பதார்த்தங்களின் உறுதி அதிகரிக்கும் ஒழுங்கை சரியாக குறித்து நிற்பது
1) $\overset{+}{C}H_3<CH_3\overset{+}{C}H_2<(CH_3)_3C^+<(CH_3)_2\overset{+}{C}H$
2) $CH_2=\overset{+}{C}H_2<CH_3\overset{+}{C}H_2<C_6H_5\overset{+}{C}(CH_3)CH=CH_2<C_6H_5\overset{+}{C}(CH_3)CH_2CH_3$
3) $(CH_3)_3\overline{C}<(CH_3)_2\overline{C}H<(CH_3)_3\dot{C}<(CH_3)_2\dot{C}H$
4) $\dot{C}H_3<CH_3\dot{C}H_2<(CH_3)_3\dot{C}<(CH_3)_2\dot{C}H$
5) $\overset{+}{C}H_3<CH_3CH=\overset{+}{C}H<CH_3\overset{+}{C}(CH=CH_2)<CH_3\overset{+}{C}H_2$

39. உயர் கொதிநிலையை உடைய மாறாக் கொதிநிலைக் கலவை பற்றிய பின்வரும் கூற்றுக்களில் சரியானது
1) கரைசலின் எல்லா அமைப்பு வீச்சுக்களிலும் இரவோற்றின் விதியை ஒழுகி நடக்கும்.
2) திரவநிலையில் தோன்றும் இடைநிலைக் கவர்ச்சி விசைகள் எல்லாம் சமமானவை.
3) கரைசல் இலட்சிய நடத்தையில் இருந்து எதிர் விலகலைக் காட்டுவதுடன் கரையம்–கரைப்பான் இடைவிசை ஏனைய இடைவிசையிலும் உயர்வாகக் காணப்படும்.
4) கரைசல் இலட்சிய நடத்தையில் இருந்து நேர் விலகலைக் காட்டுவதுடன் கரையம்–கரைப்பான் இடைவிசை குறைவாகும்.
5) கரைசலின் குறித்த அமைப்பு வீச்சினுட் கூறுகளை பகுதிபடக் காய்ச்சி வடிப்பு மூலம் வேறு பிரிக்கலாம்.

40. A,B,C,D என்பன வளிமண்டலத்தை பாதிப்பை ஏற்படுத்தும் நான்கு பிரதான வாயுக்களாகும். பின்வரும் அட்டவணையில் இவ்வாயுக்கள் ஏற்படுத்தும் பாதிப்புகள் தரப்பட்டுள்ளது.

| வாயுக்கள் | அமிலமழைக்கு காரணமானவை | பச்சைவீட்டு விளைவிற்கு காரணமானவை | Hb உடன் சேர்ந்து $O_2$ இன் கடந்தலை நலிவுறச் செய்பவை | $O_3$ படையை பிறவுறச் செய்பவை |
|---|---|---|---|---|
| A | × | × | ✓ | × |
| B | × | ✓ | × | × |
| C | ✓ | ✓ | ✓ | ✓ |
| D | × | ✓ | × | ✓ |

A,B,C,D ஆகிய வாயுக்களின் சரியான ஒழுங்கு
1) $CO,NO,C_3H_8,CF_2Cl_2$ 2) $CO,CF_2Cl_2,NO,C_3H_8$ 3) $NO,CO,CO_2,CF_2Cl_2$
4) $CO,C_3H_8,NO,CF_2Cl_2$ 5) $NO,CO_2,NO_2,C_3H_8$

**வினா 41இல் இருந்து 50 இற்கான அறிவுறுத்தல்கள்**

| (1) | (2) | (3) | (4) | (5) |
|---|---|---|---|---|
| (a) யும் (b) யும் மாத்திரம் திருத்தமானவை. | (b) யும் (c) யும் மாத்திரம் திருத்தமானவை. | (c) யும் (d) யும் மாத்திரம் திருத்தமானவை. | (d) யும் (a) யும் மாத்திரம் திருத்தமானவை. | வேறு தெரிவுகளில் எண்ணோ சேர்மானங்களோ திருத்தமானவை. |

41. பின்வரும் தாக்கங்களில் எது /எவை எதிரே தரப்பட்ட நியம வெப்பவுள்ளுறை மாற்றத்தை சரியாகக் குறித்து நிற்கும்?/ நிற்பவை?
(a) $Br_2(l) \longrightarrow 2Br(g)$ ; $\Delta H^{\ominus}_D$
(b) $C(s) \longrightarrow C(g)$ ; $\Delta H^{\ominus}_A$
(c) $H_2(g)+{}^1/_2O_2(g) \longrightarrow H_2O(l)$ ; $\Delta H^{\ominus}_C$
(d) ${}^1/_2Cl_2(g)+e \longrightarrow Cl^-(g)$ ; $\Delta H^{\ominus}_{EA}$

42. $N_2(g)+3H_2(g) \rightleftharpoons 2NH_3(g)$
மேலே தரப்பட்ட சமநிலைத் தாக்கம் பற்றிய பின்வரும் கூற்றுக்களில் சரியான கூற்று? / கூற்றுக்கள்?
a) தாக்கம் புறவெப்பமாகையால் வெப்பநிலை அதிகரிப்புடன் $NH_3$ தோன்றலின் வீதம் குறைவடையும்.
b) தொகுதியின் அமுக்கம் இரண்டு மடங்காக அதிகரிக்கும்போது $H_2(g)$ இன் பகுதியமுக்கமும் இரண்டு மடங்காக அதிகரிக்கும்.
c) தொகுதிக்கு He(g) சேர்க்கும் போது $N_2(g)$ இன் பகுதியமுக்கம் அதிகரிக்கும்
d) தொகுதியின் மொத்த அமுக்கம் நான்கு மடங்காக குறைக்கும் போது வாயுக் கூறுகளின் பகுதியமுக்கங்களின் கூட்டுத்தொகை நான்கு மடங்காகக் குறைவடையும்.

43. அயனாரை பற்றிய பின்வரும் கூற்றுக்களில் சரியானது / சரியானவை?
a) $Be^{2+}<Mg^{2+}<Na^+$ b) $Mg^{2+}<Ca^{2+}<Sr^{2+}$ c) $Cl^-<P^{3-}<S^{2-}$ d) $N^{3-}<Cl^-<S^{2-}$

44. d தொகுப்பு மூலகங்களின் சிக்கலயன்கள் பற்றிய பின்வரும் கூற்றுக்களில் சரியானது? / சரியானவை?
a) மைய அணு $sp^3$ கலப்பாகக் கொண்ட சிக்கற் சேர்வைகளின் மூலக்கூற்று வடிவம் எப்பொழுதும் நான்முகியாகும்.
b) சிக்கல் அயனின் வடிவம் கற்றயனுடன் இணைந்துள்ள இணையியின் வலிமையில் தங்கியுள்ளது.
c) கற்றயனுடன் இணைந்துள்ள இணையிகளின் எண்ணிக்கைக்கு ஏற்ப பதார்த்தத்தின் நிறம் மாறமாட்டாது.
d) எப்போதும் நடுநிலை அல்லது எதிர் அயன் பதார்த்தங்கள் மாத்திரம் இணையியாகச் செயற்படும்.

45. பின்வரும் தாக்கங்களில் எதில் /எவற்றில் ஒட்சியேற்றும் கருவியையும், தாழ்த்தும் கருவியையும் தெளிவாக அடையாளம் காணமுடியாது?
a) $2NaOH+2F_2 \longrightarrow F_2O+2NaF+H_2O$
b) $2H_2S+SO_2 \longrightarrow 3S+2H_2O$
c) $6NaOH+3Cl_2 \longrightarrow 5NaCl+NaClO_3+3H_2O$
d) $2Fe^{3+} \longrightarrow Fe^{2+}$


46. அணுக்களினதும் உப அணுத் துணிக்கைகளினதும் பற்றிய பின்வரும் கூற்றுக்களில் எது/எவை உண்மையானது / உண்மையானவை?
(a) இலத்திரனின் திணிவு, பொசித்திரனின் திணிவை ஒத்தது.
(b) உப அணுத் துணிக்கைகளில் இலத்திரன் மட்டும் கருவில் காணப்படமாட்டாது.
(c) அணுவில் காணப்படும் இலத்திரன்களின் வேகம் எப்போதும் ஒளியின் வேகத்திற்கு சமனாகும்.
(d) அணுக்கருவின் உறுதியை நியூத்திரன்கள் பாதிக்காது.

47. ஆவர்த்தன அட்டவணையில் 3 ஆம் ஆவர்த்தனத்தில் இடமிருந்து வலமாக செல்லும்போது மூலகங்களின் இயல்புகளின் போக்குப் பற்றிய பின்வரும் கூற்றுக்களில் சரியானது? / சரியானவை?
(a) அயன் சேர்வைகளை உருவாக்கும் இயல்பு அதிகரிக்கும்
(b) ஒட்சியேற்றும் இயல்பு குறைவடையும்
(c) மின்னெதிர்த்தன்மை அதிகரிக்கும்
(d) உருகுநிலை, கொதிநிலை குறைவடையும்.

48. பின்வரும் சோடிக் கரைசல்களில் எதை/ எவற்றை கலப்பதால் PH,7 இலும் கூடிய கரைசலை /கரைசல்களைப் பெறமுடியும்.
(a) $0.2\,moldm^{-3}\,H_2SO_4$ இன் $100cm^3$ ஐயும் $0.3\,moldm^{-3}$ NaOH இன் $100cm^3$ ஐயும்
(b) $0.1\,moldm^{-3}\,HNO_3$ இன் $50cm^3$ ஐயும் $0.1\,moldm^{-3}\,NH_3(aq)$ இன் $50cm^3$ ஐயும்
(c) $0.1\,moldm^{-3}\,CH_3CH_2ONa$ இன் $50cm^3$ ஐயும் $0.1\,moldm^{-3}$ NaCl இன் $100cm^3$ ஐயும்
(d) $0.1\,moldm^{-3}\,CH_3COOH$ இன் $100cm^3$ ஐயும் $0.1\,moldm^{-3}$ KOH இன் $100cm^3$ ஐயும்

49. ⌬—CH=CHCHO Cinnamaldehyde ஆனது கறுவாஎண்ணெயில் காணப்படும் ஒரு கூறாகும். Cinnamaldehyde பற்றிய பின்வரும் கூற்றுகளில் /எது எவை உண்மையாகும்.
(a) தொலனின் சோதனைப் பொருளுடன் ⌬— CH CHCOO⁻ ஐக் கொடுக்கும்
(b) $LiAlH_4$ உம் நீரும் கொண்டு இதனைத் தாழ்த்தும்போது ⌬—$CH_2CH_2CH_2OH$ ஐக் கொடுக்கும்
(c) இது 2, 4 DNP உடன் செம்மஞ்சள் வீழ்படிவைக் கொடுக்கும்.
(d) இது குளிர்ந்த ஐதான $KMnO_4$ உடன் தாக்கம் புரிந்து $C_6H_5CH(OH)CH(OH)CHO$ இனைக் கொடுக்கும்.

50. பின்வரும் சோடிகளில் எது/எவை பரிவுக் கட்டமைப்புச் சோடிகள் அல்லாதது.




(4ஆம் பக்கம் பார்க்க...)

# சனி மாற்றம் உங்களுக்கு எப்படி



## மிதுனம்

சனி பகவான் உங்கள் ராசிக்கு தனம், வாக்கு, குடும்ப ஸ்தானம் எனும் 2-ஆம் வீட்டிலிருந்து தைரிய ஸ்தானமெனும் 3-ஆம் ராசிக்குப் பெயர்ச்சி ஆவது சிறப்பு. மேலும் இந்தக் காலகட்டத்திலிருந்து ஏழரை சனி யின் உபாதையும் விலகியுள்ளது.

எனவே உங்கள் முயற்சிகள் வெற்றிய டையும். எடுத்த காரியங்கள் அனைத்தும் துரித காலத்தில் இலக்கை அடையும். பொரு ளாதார வளம் மேம்படும்.

குடும்பத்தில் அமைதியும். குதூகலமும் தாண்டவமாடும். ஆற்றலில் இருந்த பின் னடைவுகள் நீங்கி, உங்களை சனி பகவான் முன்னோக்கி உந்தித் தள்ளும் காலகட்டம் இது.

சனி பகவான் 3ஆம் இடத்தில் பலம் பெற்று அமர்ந்திருந்தாலும் அவருக்கு இது பகை வீடாக கருதப்படுகிறது. எனவே பொரு ளாதரத்தில் சில விரயங்களையும் தருவார். உங்கள் இளைய சகோதர, சகோதரிகள் உங்களை அனுசரித்து நடந்து கொண்டா லும், நீங்கள் அவர்களின் மீது பாசத்தைப் பொழிந்தாலும் அவர்கள் சில நேரங்களில் உங்களிடம் பாராமுகமாக நடந்து கொள் வதும் தவிர்க்க முடியாத தாகும்.

அதே நேரம் உங்களை அலைக்கழித்து வந்த எதிரிகள் மறைவார்கள். வெளி விளை யாட்டுகளில் ஈடுபட்டிருப்பவர்கள் போட்டி, பந்தயங்களில் எளிதில் வெற்றி காண்பார் கள். சிலருக்கு இந்தத் தைரிய ஸ்தான சனி பகவான் விருதுகளையும் பெற்றுத்தருவார்.

இந்தக் காலகட்டத்தில் சனி பகவானின் பார்வை பூர்வ புண்ய, புத்திர, பஞ்சம ஸ்தானங்களின் மீது படுகிறது. இதனால் தெய்வ பலம் கூடும். நீங்கள் செய்யும் பிரார்த் தனைகளுக்கு கடவுள் செவிசாய்ப்பார். உங் கள் புத்திர, புத்திரிகள் உங்கள் சொல் கேட்டு நடந்து உங்களை மகிழ்ச்சிக் கடலில் ஆழ்த் துவார்கள். வள்ளுவர் கூற்றுப்படி 'இவன் தந்தை என் நோற்றான் கொல் எனும் சொல்' என்பதற்கு ஏற்றபடி உங்கள் குழந்தைகள் சிறப்பான வெற்றிகளைக் காண்பார்கள்.

வெளிநாட்டுப் படிப்புக்கு முயற்சி செய்ப வர்கள் பண உதவித் தொகை பெற்று பெயர் பெற்ற பல்கலைக்கழகங்களில் இடம் பெறு வார்கள். 9 ஆம் இடமான பாக்ய ஸ்தானத் தைப் பார்க்கும் சனி பகவான், தந்தையின் நலத்தையும், பூர்வீகச் சொத்துக்களையும் காப்பார். தந்தை-மகன் உறவு சீராகவும் உயர் வாகவும் அமையும். சிலர் வெளிநாடு செல் லும் வாய்ப்புகளையும் பெறுவார்கள்.

சனி பகவானின் பார்வை விரய ஸ்தானத் தின் மீது விழுவதால் எதிர்பாராத வகையில் செயல்களில் வெற்றியும் அதனால் தன லாபத்தையும் பெறுவீர்கள். அதே நேரத்தில் அந்த வெற்றிகளும் இலாபங்களும் சில இழப்புகளுக்குப் பிறகே கிடைக்கும் என் பதும் உண்மை.

உத்யோகஸ்தர்கள் பதவி உயர்வு மற் றும் ஊதிய உயர்வு ஆகியவற்றைப் பெறு வார்கள். தேவையில்லாத பிரச்சினைகளில் மாட்டிக் கொண்டவர்கள் அவப்பெயரில் இருந்து விடுபட்டுவிடுவார்கள். அதேநேரம் சக ஊழியர்களிடம் பார்த்துப் பழகவும்.

மேலதிகாரிகள் நட்பு பாராட்டுகிறார்கள். என்றெண்ணி, அவர்களிடம் அடுத்தவர் களைப் பற்றி கோள் சொல்லி வம்பில் மாட் டிக்கொள்ள வேண்டாம். வேலைப் பளு குறைவதால் சக ஊழியர் களுக்கு உதவி செய்து உங்கள் மதிப்பு-மரியாதையை உயர்த் திக் கொள்ளுங் கள்.

இந்த ராசி வியாபாரிகளுக்கு வியாபாரத் தில் நிலவி வந்த சிக்கல்கள் விலகும். வரு மானம் படிப்படியாக உயரும். பழைய கடன் களை அடைத்துவிடுவீர்கள். வங்கிகளிடமி ருந்து கடன்கள் உங்களைத் தேடிவரும். மக் களுக்கு அத்யாவசியமான பொருட்களை விற்பனை செய்து கூடுதல் இலாபத்தைப் பெறுவீர்கள். கூட்டாளிகள் உங்களுடன் நட்புடன் இருப்பார்கள். உங்கள் ஆலோச னையைக் கேட்டு நடப்பார்கள்.

அரசியல்வாதிகள் அனுகூலமான சூழ் நிலையைச் சந்திப்பார்கள். கட்சியில் உங் களை வம்பில் மாட்டி விட்டவர்கள் உங்களின் தொண்டர்களாக மாறுவார்கள். மேலும் புதிய தொண்டர்களும் கிடைப்பார்கள். சமுதாயத் தில் உங்களின் புகழும் செல்வாக்கும் வள ரும். நெடுங்காலமாக நடந்து வந்த உங் களுக்கெதிரான வழக்குகள் சாதகமாக முடி வடைந்து நீங்கள் குற்றமற்றவர் என்று விடு தலையாவீர்கள். இதனால் கட்சி மேலிடத் திலும் உங்கள் செல்வாக்கு அதிகரிக்கும்.

கலைத்துறையினரைப் பொறுத்தவரை உங்கள் முயற்சிகள் வீண் போகாது. சக கலைஞர்களுக்கு தக்க சமயத்தில் உதவி செய்து உங்கள் நிலையை உயர்த்திக் கொள் வீர்கள். கலைச்சங்கங்களின் நடவடிக்கை களில் ஆர்வமாகக் கலந்துகொண்டு பணி யாற்றுவீர்கள். ரசிகர்களும் உங்களுக்கு ஆதரவாக இருப்பார்கள்.

வேலையில் பளு குறையாவிட்டாலும் உங்கள் திறமையினால் உங்களுக்குக் கொடுக்கப்பட்ட வேலைகளைச் சிறப்பாக முடிக்கும் ஆற்றல் உண்டாகும். இதனால் கூடுதல் பண வரவையும் பெறுவீர்கள்.

பெண்மணிகளுக்கு கணவரிடம் ஒற் றுமை அதிகரிக்கும். குடும்பத்தினரிடம் உங் கள் மதிப்பு உயரும். விருந்துகளுக்கு மிடுக் கான உடையணிந்து சென்று வருவீர்கள். சிலர் புது வீடுகட்டி கிரஹப் பிரவேசம் செய் வார்கள். மனதில் உற்சாகம் ததும்பும். உடல் ஆரோக்கியம் திருப்திகரமாக இருக்கும். பிள் ளைகளால் நன்மைகளைக் காண்பீர்கள்.

விவசாயிகளுக்கு மகசூல் அதிகமாகி, நல்ல வருமானம் கிடைக்கும். இருப்பினும் பணம் கையில் தங்காது. சுக விரயமாகும். மற்றப்படி புதிய குத்தகைகளை எடுக்க முற் படுவீர்கள். அதில் வெற்றியும் அடைவீர்கள். புதிய விவசாய உபகரணங்கள் வாகனங்கள் போன்றவற்றை வாங்கி மகிழ்வீர்கள்.

மாணவமணிகள் படிப்பில் நல்ல மதிப் பெண்களை 'அள்ளுவார்கள். உடல் நலம் சிறப்பாக அமையும். மேல் படிப்புக்கான முயற்சிகள் எதிர்பார்த்த வெற்றியைத் தேடித் தரும்.

சிலர் மாலை நேரங்களில் தங்கள் வழக் கமான படிப்புக்குச் சம்பந்தமில்லாத வேறு படிப்பைப் படித்து தங்கள் நிலையை உயர்த் திக்கொள்வார்கள்.

(தொடரும்)

# கிரிக்கெட் உலகில் சச்சின் ஒரு சகாப்தம்

சச்சின் என்றாலே சாதனைதான். ஒரு நாள் போட்டியில் 15ஆயிரம் ஓட்டங்களைக் கடந்த முதல் வீரர் என்ற மகத்தான சாதனையை படைத்த சச்சின் டெண்டுல் கர்.சர்வதேச ஒருநாள் கிரிக்கெட்டில் அதிக சதம் அடித்தவர், அதிக ஒருநாள் கிரிக் கெட் போட்டிகளில் விளையாடியவர் என பல சாதனைகளுக்கு சொந்தக்காரார்.



இவரது சாதனை பலவற்றை அலசு வோம்.

சச்சின் இதுவரை விளையாடிய சர்வதேச ஒருநாள் போட்டிகளில் இந்தியா 189இல் வெற்றிபெற்றுள்ளது. இதில் இவர் 9 ஆயிரத்து 61ஓட்டங்களை (சராசரியாக 56.98 ஓட்டங் கள்) எடுத்துள்ளார். ஸ்ரைக்ரேற் 89.72என அசத்தியுள்ளார்.

பகலிரவு போட்டிகளில் இரண்டாவதாக துடுப்பெடுத்தாடிய அணிவீரர்களில் அதிக ஓட்டங்கள் குவித்தவரும் சச்சின் தான்.

இவ் வரிசையிலுள்ள வீரர்களின் சராசரி யில் இவர்,தென்னாபிரிக்காவின் குரோனி, அவுஸ்திரேலியாவின் பெவனுக்கு அடுத்த படியாக மூன்றாவது இடத்திலிருந்தாலும் ஸ்ரைக்ரேற்றில் இவர்களை விட அதிக வித்தி யாசத்தில் முன்னிலை வகிக்கிறார்.

பகலிரவு போட்டியில் இரண்டாவதாக்த் துடுப்பெடுத்தாடி அதிக ஓட்டங்கள் குவித்த முதல் 05 வீரர்களும் வருமாறு,

| வீரர் | இன்னிங்ஸ் | ரன் | சராசரி | எஸ்.ஆர்., ★ |
|---|---|---|---|---|
| சச்சின்(இந்தியா) | 75 | 3057 | 45.39 | 87.94 |
| காலிஸ்(தெ.ஆ.,) | 56 | 1557 | 41.26 | 70.58 |
| பெவன்(.ஆஸி.,) | 42 | 1599 | 51.58 | 69.55 |
| குரோனியே(தெ.ஆ.,) | 38 | 1405 | 58.54 | 73.75 |
| திப்பனர்(தெ.ஆ.,) | 30 | 1073 | 41.26 | 68.24 |

★ ஸ்டிரைக் ரேட் www.dinamalar.m

சச்சின் சொந்த மண்ணில் நடந்த போட்டி களை விட பொதுவான இடங்களில் விளை யாடிய போட்டிகளில் சிறப்பாக செயற்பட்டுள் ளார். இவர் பொதுவான இடங்களில் 138 போட்டிகளில் விளையாடி 6ஆயிரத்து 11 ஓட்டங்கள் (சராசரி 51.37ஓட்டங்கள்) பெற் றுள்ளார்.

இதில் 17சதமும், 32 அரைச்சதமும் எடுத்துள்ளார். ஆனால் இந்தியாவில் பங் கேற்ற 130 போட்டிகளில் 5ஆயிரத்து 229 ஓட்டங்கள்(சராசரி 46.27 ஓட்டங்கள்) எடுத் துள்ளார். இதில் 16சதமும், 29அரைச் சதமும் பெற்றுள்ளார்.

| இடம் | போட்டி | ரன் | சராசரி | சதம்/அரைசதம் |
|---|---|---|---|---|
| இந்தியா | 130 | 5229 | 46.27 | 16/29 |
| அன்னியமண் | 119 | 3803 | 34.57 | 5/18 |
| பொது | 138 | 6011 | 51.37 | 17/32 |

### துடுப்பாட்ட வரிசை (முதல் மூன்று இடம்)

துடுப்பாட்ட வீரர்களில் அதிக ஓட்டங் களைக் குவித்த வீரர் என்ற சாதனைக்கு சொந்தக்காரனான சச்சின் 275 இன்னிங் ஸில் 12ஆயிரத்து 19 ஓட்டங்களை எடுத்துள் ளார். இதில் அதிக சராசரி கொண்ட வீரர்கள் வரிசையில் இவர் நான்காவது இடத்தில் இருக்கிறார். ஆனால் இப் பட்டியலில் இரண் டாவது மற்றும் மூன்றாவது இடம் பிடித்துள்ள பாகிஸ்தானின் யூசுப் மற்றும் நியூசிலாந்தின் டர்னரை விட அதிக ஸ்ரைக்ரேற்றை வைத் துள்ளார்.

இதில் மேற்கத்திய தீவுகளின் ரிச்சார்ட்ஸ் முதலில் இருக்கிறார்.

| வீரர் | இன்னிங்ஸ் | ரன் | சராசரி | எஸ்.ஆர்., ★ |
|---|---|---|---|---|
| ரிச்சர்ட்ஸ்(வெ.இ.,) | 51 | 2418 | 57.57 | 86.88 |
| யூசுப்(பாக்.,) | 43 | 1988 | 55.22 | 78.82 |
| டர்னர்(நியூசி.,) | 33 | 1346 | 48.07 | 68.46 |
| சச்சின்(இந்தியா) | 275 | 12019 | 47.13 | 87.22 |
| காலிஸ்(தெ.ஆ.,) | 145 | 5576 | 46.08 | 71.43 |

சச்சின் ஆரம்ப வீரராக களமிறங்கிய போட்டிகளில் தான் அதிகம் ஜொலித்துள் ளார்.அதிலும் பந்தை முதலில் சந்திக்காமல் மறுமுறையில் ரன்னராக வருவது தான் இவ ருக்கு மிகவும் பிடித்த இடமாக இருக்கிறது.

இந்நிலையில் 219போட்டிகளில் களமி றங்கிய சச்சின் 10 ஆயிரத்து 302 ஒட்டங்க ளைக் குவித்துள்ளார்.

### களமிறங்கிய இடம், பெற்றுள்ள ஓட்டங்கள்

| இடம் | இன்னிங்ஸ் | ரன் | சராசரி | எஸ்.ஆர்., ★ |
|---|---|---|---|---|
| முதல் | 47 | 1625 | 36.11 | 82.82 |
| 2வது | 219 | 10310 | 51.20 | 88.60 |
| 3வது | 10 | 92 | 10.22 | 48.16 |
| 4வது | 61 | 2059 | 38.54 | 77.08 |
| 5வது | 36 | 797 | 28.46 | 81.07 |
| 6வது | 4 | 148 | 49.33 | 134.54 |
| 7வது | 1 | 20 | 20 | 80.00 |

www.dinamalar.m

தற்போது 34 வயதான சச்சின டெஸ்டில் 137 போர்ட்டிகளில் 10ஆயிரத்து 922, ஓட் டங்களையும் சர்வதேச ஒருநாள் கிரிக் கெட் டில் 388 போட்டிகளில் 15ஆயிரத்து 51 ஓட் டங் களையும் பெற்று சர்வதேச கிரிக்கெட் அரங்கில்இதுவரை 25ஆயிரம் ஓட்டங் களைக் கடந்த வீரர் என்ற சாதனையையும் தன் னகத்தே வைத்துள்ளார்.

சர்வதேச(டெஸ்ட் மற்றும் ஒருநாள்) போட் டிகளில் அதிக ஓட்டங்கள் குவித்த வீரர்கள்

| வீரர் | போட்டி | ரன் | சராசரி | சதம்/அரைச்சதம் |
|---|---|---|---|---|
| சச்சின்(இந்தியா) | 526 | 25983 | 48.24 | 78/122 |
| லாரா(வெ.இ.,) | 430 | 22358 | 46.28 | 53/111 |
| இன்சமாம்(பாக்.,) | 498 | 20563 | 43.47 | 35/129 |
| பாண்டிங்(.ஆஸி.,) | 395 | 19941 | 49.60 | 56/99 |
| டிராவிட்(இந்தியா) | 427 | 19631 | 46.85 | 36/126 |

வட்டு. அமிர்தன்

# இரசாயனவியல் தொடர்ச்சி...

51. தொடக்கம் 60 வரையுள்ள வினாக்களுக்கான அறிவுறுத் தல்களுக்கான சுருக்கம்.

| தெரிவுகள் | முதலாம் கூற்று | இரண்டாம் கூற்று |
|---|---|---|
| (1) | உண்மை | உண்மையாகவிருந்து முதலாம் கூற்றுக்கு திருத்தமான விளக்கத்தை தருவது. |
| (2) | உண்மை | உண்மையாகவிருந்து முதலாம் கூற்றுக்கு திருத்தமான விளக்கத்தை தராதது. |
| (3) | உண்மை | பொய் |
| (4) | பொய் | உண்மை |
| (5) | பொய் | பொய் |

| | முதலாம் கூற்று | இரண்டாம் கூற்று |
|---|---|---|
| 51 | 3 d தொடரில் Mn இனதும் Zn இனதும் உருகுநிலை எதிர்பார்க்க முடி யாத அளவில் சிறியது | Mn உம் Zn உம் உறுதியான இலத்திரன் நிலையமைப்பை. கொண்டிருப்பதுடன் உலோ கப் பிணைப்பிற்கு இலத்திரன் பங்களிக் கும் போக்கு குறைவாகும். |
| 52 | தொடுகை முறையில் $SO_3$(g) வாயுவை நேரடியாக நீருடன் தாக்கம் புரியவிடு வதில்லை. | நீரில் $SO_3$(g) இன் கரைதிறன் மிகவும் தாழ்வானதாகும். |
| 53 | $H_2O$ ஆனது சூழல் மாசுறுத்தியாக செயற்படக்கூடிய சேர்வையாகும். | வளியில் உள்ள NOவாயுவானது நீரில் கரைந்து நைத்திரிக்கு அமிலத்தைக் கொடுக்கும். |
| 54 | சேர்வைகளை ஆக்கும் மூலகங்கள் கொண்டிருக்கும் மின்னெதிர்த் தன்மை வித்தியாசம் 2.1 இலும் அதிகம் காட்டு வது அயன் இயல்பாகும். | NaH அயன்சேர்வையாக செயற்படும் |
| 55 | கற்றயன் பண்பறி பகுப்பில் iron (II) ionநேரடியாக அடையாளங் காண முடியாது. | $Fe(OH)_3$ இன் கரைதிறன் பெருக்கம் மிகவும் அதிகமான பெறுமானமாகும். |
| 56 | $C_6H_5NH_2$(l) இனை அடையாளங் காண்பதற்கு நைத்திரேற்றக் கலவை யைப் பயன்படுத்த முடியும். | $C_6H_5NH_2$ இனால் 2,4 dinitroaniline உருவாக்க முடியும். |
| 57 | அமில ஏலைட்டுக்கள், காபொட்சி லிக் அமிலங்களிலும் பார்க்க கரு நாட்ட தாக்கு பொருள் இயல்பை கூடு தலாகக் காட்டும். | காபொட்சிலேற்று அன்னயன் பிரிவி னால் உறுதியாக்கப்படும். |
| 58 | Geraniol ஐயும் நீரையும் கொண் கலவையை கொதிநீராவி காய்ச்சி வடிப்பு மூலம் பிரித்தெடுக்க முடியும். | கொதிநீராவி காய்ச்சி வடிப்பில் நீரின் நிரம்பல் ஆவியமுக்கம் வெளி அமுக்கத் திற்கு சமனாக உள்ளபோது கலவை கொதிக் கும். |
| 59 | மாறா வெப்பநிலையில் இலட் சிய வாயு மூலக்கூறின் இயக்கச் சக்தி மாறி லியாகும். | வாயு மூலக்கூறுகளின் இயக்கச்சக் தியை கருதும் போது வேக இடைமிகவும் முக்கியத்துவம் வாய்ந்ததாகும். |
| 60 | பினோத்தலின் ஐயும், மெதைல் செம்மஞ்சள் ஐயும் வன்னமில்-வன் மூல நியமிப்பிற்கு காட்டியாகவும் பயன் படுத்தலாம். | நியமிப்பு ஒன்றில் காட்டிக்கு ஏற்ப முடிவுப்புள்ளி வேறுபடலாம். ஆனால் நடுநிலைப்புள்ளி (equivalance point) வேறுபடமாட்டாது. |

# ஜெய்ப்பூர் நிறுவன கண்காட்சி நீடிப்பு

யாழ்.ஜெய்ப்பூர் நிறுவனத்தின் 20ஆவது ஆண்டு நிறைவையொட்டி நேற்றுமுன்தினம் ஆரம் பிக்கப்பட்ட மாற்று வலுவுடையோருக்காக தயாரிக்கப்படும் செயற்கை அவயவங்கள் சார்புறுப் புக்கள், நடமாடும் உபகரணங்கள் தொடர்பான கண்காட்சி அனேகரின் வேண்டு கோளுக்கிணங்க மேலும் இரு தினங்களுக்கு நீடிக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. அதன்படி வெள்ளிக் கிழமை காலை 8.30 மணி தொடக்கம் பி.ப 3.00மணி வரையும், சனிக்கிழமை காலை 8.30மணி தொடக்கம் பி.ப 2.00 மணி வரையும் கண்காட்சி நடைபெறும். (அ)

பயில்வானின் போர்த் தந்திரத்தை பின்பற்றுவது முட்டாள்தனம்.

–இலங்கை

வலம்புரி

## இடங்களை மீட்பதால் மட்டும் சமாதானம் வந்துவிடமாட்டாது

இலங்கையில் இடம் பெறும் இனப்போர் தீர்க்க தரிசனத்துடன் நடத்தப்படவில்லை. இனங்களுக்கிடையேயான யுத்தம் நீடிக்குமாயின் அதனால் நாட்டின் எதிர்கால வளங்கள் அழிவதுடன் இலங்கை மனிதர்கள் வாழ்வதற்குரிய நாடு அல்ல என்ற நிலைக்கும் வந்து விடும்.

அந்தநிலை இப்போது வந்து விட்டது. புத்திஜீவிகள் நாட்டைவிட்டு வெளியேறி வருகின்றனர். மனிதக் கொலைகள் ,ஆட்கடத்தல்கள்,கைதுகள் என்பவற்றினால்எங்கும்பயமும்துன்பமும்கண்ணீருமாக மனித வாழ்க்கை நகர்வடைகின்றது.

வாழ்வென்பது இன்பகரமானது. அதனை துன்பப்படுத்துவது அதற்கு துணைபோவது என எல்லாமே பாவச்செயலாகும்.

இனத்தால்-மொழியால் -மதத்தால் மனிதர்களை வகைப்படுத்தாமல் எல்லோரும் மனிதர்கள் எல்லோரும் இந் நாட்டின் மைந்தர்கள் என்ற நினைப்போடு அரசாட்சி செய்யப்படவேண்டும்.

இதைவிடுத்து சிறுபான்மை இனத்துக்கு எதிராக போர் தொடுப்பது சிறுபான்மை இன மக்களின் பூர்வீகப் பகுதிகளில் அரச கட்டுப்பாடு என்ற பேரில் ஆக்கிரமிப்பது என்பன நீண்டகாலத்தில் எதிர் விளைவுகளையே தருவதாக அமையும்.

இலங்கையில் நிலவுகின்ற இனப்பிரச்சினைக்கு சமாதான வழியில் தீர்வுகாணுங்கள் என உலக நாடுகளின் உரத்த குரல்களுக்கு இலங்கை அரசு செவிசாய்ப்பதாக இல்லை.

மாறாக சிறுபான்மை இன மக்கள் வாழும் பிரதேசங்களில் அரச கட்டுப்பாட்டை நிறுவுவதே அரசின் முதற்பணியாகவுள்ளது.

கிழக்கு மாகாணத்தை விடுவித்து விட்டோம். வடக்கு முழுவதையும் அரச கட்டுப்பாட்டிற்குள் கொண்டு வருவதற்கான யுத்த நடவடிக்கைகளை முன்னெடுப்போம் எனக்கூறுவதெல்லாம் நிலைத்த சமாதானத்திற்கு வழியாக மாட்டாது.

ஏற்கனவே அரசினால் விடுவிக்கப்பட்டு பாதுகாப்புப் படையினரின் கண்காணிப்பில் உள்ள பிரதேசங்களில் ஊரடங்கு உத்தரவுகளும் தாக்குதல் சம்பவங்களும் இனந்தெரியாத படுகொலைகளும் நடந்து கொண்டே இருக்கிறது.

ஆக விடுவிக்கப்பட்ட பிரதேசம் என்பதன் பொருள் வீதிக்கு வீதி,சந்திக்குச் சந்தி ஆயுதங்களுடன் காவல் புரிவது என்ற நிலையாகிவிட்டது.

இந் நிலைமை நாடென்ற வகையிடலுக்கு உகந்தது அல்ல. எனவே நான் அதை மீட்டேன், இதை மீட்டேன் எனக்கூறுவதை விடுத்து நாம் எல்லோரும் சேர்ந்து இந் நாட்டில் அமைதியை- சமாதானத்தை- இன ஒற்றுமையைக் கொண்டு வந்தோம் என பெருமையடைவோமாக.

## யாழ்.மாவட்டத்தில் சேவை புரிய அனுமதிக்குமாறு பலாலி–கோப்பாய் பயிற்சி ஆசிரியர்கள் கோரிக்கை

(யாழ்ப்பாணம்)

பலாலி–கோப்பாய் ஆசிரிய கலாசாலைகளில் பயிற்சி பெற்று வெளியேறிய ஆசிரியர்கள் வெளிமாவட்டங்களில் கடமையேற்க முடியாத சூழ்நிலை தற்போது காணப்படுவதால் யாழ்.மாவட்டத்திலேயே தற்காலிக இணைப்பு வழங்கி தம்மை சேவை புரிய அனுமதிக்குமாறு கோரிக்கை விடுத்துள்ளனர்.

ஆசிரியர் கலாசாலைகளில் இரண்டு வருட ஆசிரிய பயிற்சியை முடித்துக்கொண்டு யூன் 30 ஆம் திகதி வெளியேறிய ஆசிரியர்கள் யூலை முதலாம் திகதி தொடக்கம் ஆசிரிய பயிற்சிக்கு இணைக்கப்படுவதற்கு முன்னர் எந்தப் பாடசாலைகளில் கடமைபுரிந்தார்களோ அந்தப் பாடசாலைக்கே திரும்பிச் செல்லவேண்டும்.

பலாலி–கோப்பாய் ஆசிரிய கலாசாலைகளில் பயிற்சியை முடித்த ஆசிரியர்கள் யுத்த சூழ்நிலையில் குடும்ப உறவுகளை விட்டு பிரிந்து இருக்க முடியாத நிலை, யாழ்.மாவட்டத்திற்கு வெளியே செல்வதற்கான இயல்பான போக்குவரத்து வசதி இன்மை என்பவற்றை காரணம் காட்டி தமக்கு தற்காலிக இணைப்பு யாழ்.மாவட்ட பாடசாலைகளில் வழங்கவேண்டுமென கோரிக்கை விடுத்துள்ளனர்.

தமது கோரிக்கை உள்ளடங்கிய மகஜர்களை மத்திய கல்வி அமைச்சுக்கும் மாகாணக் கல்வி அமைச்சுக்கும் அவர்கள் அனுப்பிவைத்துள்ளனர். இது தொடர்பாக கல்வி அமைச்சு அதிகாரி ஒருவர் கருத்துத் தெரிவிக்கையில்,ஆசிரிய கலாசாலையில் பயிற்சி பெறும் காலப் பகுதியில் சம்பந்தப்பட்டவர்கள் படிப்பு லீவுடன் சம்பளக்கொடுப்பனவையும் வழங்கிய மாகாணங்களுக்கு அவர்கள் கடமைக்குத் திரும்பவேண்டியது அவசியம்.பயிற்சி முடிந்த பின்னர் புதிய நியமனம் வழங்கப்படும் வரை இந்த நியமனத்தை ஏற்றுக் கொள்ளவேண்டியது வரவேற்கத்தக்கது எனத் தெரிவித்தார். (ச-5)

## ஈழத்தமிழரின் வாழ்வுரிமையை வலியுறுத்தி யூலை 20-ல் தமிழகத்தில் ஆர்ப்பாட்டம்

(சென்னை)

ஈழத்தமிழர் பிரச்சினையில் இந்திய அரசு வேடிக்கை பார்ப்பதைக் கண்டித்து யூலை 20 ஆம் திகதி தமிழகம் முழுவதும் கண்டன ஆர்ப்பாட்டம் நடாத்தப்படும் என்று திராவிடர் கழகத்தலைவர் கி.வீரமணி அறிவித்துள்ளார்.

சென்னையில் அவர் வெளியிட்டுள்ள அறிக்கை வருமாறு,திருகோணமலையில் பேசிய ஜனாதிபதி ராஜபக்ஷ விடுதலைப்புலிகளை அடியோடு அழிக்காமல் இலங்கையில் அமைதி திரும்பாது என்று கூறியிருக்கிறார். பல நாடுகள் இராணுவ நடவடிக்கை மூலம் ஈழத்தமிழர் பிரச்சினைக்குத் தீர்வு காண முடியாது அரசியல் தீர்வுதான் ஒரே வழி என்று சொன்னதை ராஜபக்ஷ கேட்கத்தயார் இல்லை.

ஓர் இறுதிப்போராட்டத்திற்கு இராணுவமும் புலிகளும் தயாராகி வருகின்றனர். நாளுக்கு நாள் நிலைமை மோசமாகப்போய்க்கொண்டிருக்கிறதே, தடுத்துநிறுத்த முன்வரவேண்டாமா? இந்திய அரசு இதனை வேடிக்கை பார்த்துக்கொண்டிருக்கலாமா? இதனை மத்தியில் ஆளும் கூட்டணியாகவுள்ள அனைத்துக் கட்சித் தலைவர்களும் மனதில் கொள்ளவேண்டும்.

இதனை வலியுறுத்தி 20 ஆம் திகதி தமிழ் நாடு முழுவதும் மாவட்டத் தலைநகர்களில் ஈழத்தமிழர்கள் வாழ்வுரிமை பறிக்கும் அரசினை இந்திய அரசு உட்பட பன்னாட்டு அரசுகளும் தடுத்துநிறுத்தி மனித நேயப்பணியில் ஈடுபடவேண்டும் என்பதை வலியுறுத்தி ஆர்ப்பாட்டங்களை நடாத்த திராவிடர் கழகம் திட்டமிட்டுள்ளது. சென்னையில் தனது தலைமையில் காலை 11 மணிக்கு ஆர்ப்பாட்டம் நடைபெறும் என்று அதில் வீரமணி தெரிவித்துள்ளார். (எ-1)

## வவு.அரசியல்துறைப் பொறுப்பாளருடன் செஞ்சிலுவைச் சங்கக்குழுவினர் சந்திப்பு

(வவுனியா)

தமிழீழ விடுதலைப் புலிகளின் வவுனியா மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளருக்கும் ஓமந்தை சோதனை நிலைய சர்வதேச செஞ்சிலுவைச் சங்கக் குழுவின் கண்காணிப்பாளர்களுக்கும் இடையேயான சந்திப்பு நேற்று முன்தினம் நடைபெற்றது.

வவுனியா மாவட்ட அரசியல்துறைச் செயலகத்தில் நேற்று முன்தினம் இச் சந்திப்பு நடைபெற்றது. எறிகணைத்தாக்குதல்கள் நடத்தக்கூடாது எனப் பேசி தீர்க்கப்பட்ட போதும் ஓமந்தை சோதனை நிலையத்தின் ஊடாக இராணுவத்தினர் மக்கள் பயணித்துக்கொண்டிருக்கும் வேளை எறிகணைத் தாக்குதலை நடத்தியுள்ளனர். இது தொடர்பாக வவுனியா மாவட்ட அரசியல் துறை பொறுப்பாளர் ஞானம் செஞ்சிலுவைச் சங்கக் குழுவினருக்கு விளக்கினார் எனத் தெரிவிக்கப்பட்டது. (எ-1)

## விடுதலைப்புலிகளை வெல்லமுடியாது என்ற மேற்குலகின் கருத்து பொய்த்துவிட்டது என்கிறார் ஹெகலிய ரம்புக்வெல

(கொழும்பு)

விடுதலைப்புலிகள் வெல்லப்பட முடியாத அமைப்பு என அனைத்துலகம் கொண்டிருந்த கருத்தினை தமது படைகள் முறியடித்து விட்டதாக பாதுகாப்பு விவகாரங்களுக்கான பேச்சாளர் அமைச்சர் ஹெகலிய ரம்புக்வெல தெரிவித்துள்ளார்.

நேற்று நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பில் அவர் இந்த கருத்தை வெளியிட்டுள்ளார். கிழக்கு மாகாணத்தில் தமது படைகள் விடுதலைப்புலிகளுக்கு எதிராக பெற்றுள்ள வெற்றிகள் மூலம் விடுதலைப்புலிகளை போரில் வெல்ல முடியாது என்ற மேற்குலகின் எதிர்வு கூறல் பொய்யாக்கப்பட்டுள்ளதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

சில அரசியல் கட்சிகள் தொப்பிக்கல வெற்றி குறித்து குறைவான மதிப்பீடுகளை மக்கள் மத்தியில் பரப்பி வருவதாகவும் இது தேசத்துரோக நடவடிக்கை என்றும் அமைச்சர் ஹெகலிய ரம்புக்வெல தெரிவித்துள்ளார். (எ-1)

## வீதிகளில் அலையும் நாய்களை கொல்ல இலங்கையில் தடை

(கொழும்பு)

வீதிகளில் அலைந்து திரியும் கட்டாக்காலி நாய்களைக் கொல்ல வேண்டாம் என கடந்த வருடம் தான் விடுத்த உத்தரவினை தொடர்ந்து கடைப்பிடிக்குமாறு ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ உள்நாட்டலுவல்கள் மற்றும் மாகாண சபைகள் அமைச்சருக்கு அறிவுறுத்தல் விடுத்திருக்கின்றார்.

ஜனாதிபதி செயலகம் வெளியிட்டுள்ள அறிக்கை ஒன்றில் கட்டாக்காலி நாய்களின் பெருக்கத்தையும் அவற்றினால் பரப்பப்படும் நோய்களை கட்டுப்படுத்துவதற்குமென நாய்களைக் கொல்லாது மாறாக அவற்றினை மலடாக்குவது மற்றும் தடுப்பூசி போடுவது போன்ற மனிதாபிமான முறைகளை பயன்படுத்தி கட்டுப்படுத்துமாறும் ஜனாதிபதி கட்டளை பிறப்பித்துள்ளார். (ச-5)

## மிதிவெடி விழிப்புணர்வு அபாயக் கல்வி கருத்தரங்கு

(யாழ்ப்பாணம்)

வெண்புறா செயற்கை உறுப்பு தொழில்நுட்ப நிறுவனத்தால் நடாத்தப்படும் அரச சார்பற்ற நிறுவன வெளிக்கள உத்தியோகஸ்தர்களுக்கான மூன்று நாள் மிதிவெடி விழிப்புணர்வு அபாயக் கல்விக் கருத்தரங்கு இன்று ஆரம்பமாகவுள்ளது.

சமூக அபிவிருத்தி மன்றத்தில் நடைபெறும் மூன்று நாள் கருத்தரங்கு நிகழ்வில் மிதிவெடியினால் ஏற்படும் ஆபத்துக்கள் குறித்து விளக்கப்படவுள்ளது. (சு)

## மீள் பரீட்சைகள்

(யாழ்ப்பாணம்)

யாழ்.பல்கலைக்கழகத்தில் முகாமைத்துவ கற்கைகள் வணிக பீடத்தின் எல்லா ஆண்டுகளுக்கான பழைய பாடத்திட்ட மீள் பரீட்சைகள் எதிர்வரும் 16 ஆம் திகதி திங்கட்கிழமை முதல் ஆரம்பமாகின்றன.

நேர அட்டவணை தொடர்பான விபரங்களை அலுவலக விளம்பரப் பலகையில் பார்வையிடுமாறு பரீட்சார்த்திகளை முகாமைத்துவ கற்கைகள் வணிக பீட பீடாதிபதி க.தேவராஜா கேட்டுக்கொண்டுள்ளார். (அ)

## ஸ்கிறபிள் சுற்றுப்போட்டி

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாவட்ட பாடசாலைகளுக்கிடையிலான ஸ்கிறபிள் சுற்றுப்போட்டி எதிர்வரும் 16-ம் திகதி நடைபெறவுள்ளது. போட்டியில் பங்கு பற்ற விரும்பும் பாடசாலை மாணவர்கள் தமது பொறுப்பாசிரியர்களுடன் போட்டித் தினத்தன்று காலை 8 மணிக்கு முன்னதாக யாழ்.இந்துக்கல்லூரி குமாரசுவாமி மண்டபத்துக்கு சமுகம் தருமாறும் மேலதிக விபரங்களுக்கு ஸ்கிறபிள் கழகம், யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி என்ற முகவரிக்கு தொடர்பு கொள்ளுமாறு யாழ். இந்துக்கல்லூரி அதிபர் கேட்டுக்கொண்டுள்ளார். (அ)

## தேசிய உற்பத்தித்திறன் செயலக உற்பத்தித்திறன் ஓவியப்போட்டி

தேசிய உற்பத்தித்திறன் செயலகத்தினால் நடாத்தப்படும் நாடளாவிய சுவரொட்டிச் சித்திரப்போட்டிக்கு விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளது.

கல்வியினூடே உற்பத்தித் திறன் மிக்க தேசம் என்ற தலைப்பில் ஓவியங்கள் வரையப்படவேண்டும். ஒருவர் எத்தனை ஓவியங்களையும் அனுப்பலாம்.அவை சொந்தப் படைப்பாக இருக்கவேண்டும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

ஓவியங்களை மாதிரி விண்ணப்பத்துடன் பணிப்பாளர், தேசிய உற்பத்தித்திறன் செயலகம், 318, ஹைலெவல் வீதி, கொழும்பு 06 என்ற முகவரிக்கு எதிர்வரும் 15 ஆம் திகதிக்கு முன்னதாக அனுப்பிவைக்கவும்.

மேலதிக விபரங்களை 0112812163/6 என்ற தொலைபேசி இலக்கங்களுடன் தொடர்பு கொண்டு பெற்றுக்கொள்ளலாம் என யாழ். மேலதிக அரசாங்க அதிபர் ஆ.சிவசுவாமி அறிவித்துள்ளார். (சு)

## அமைச்சர் மிலிந்தவின் இந்தியப் பயணம் ரத்து

வெளிவிவகார அமைச்சர் ரோகித போகல்லாகமவுக்கும் உல்லாசப் பயணத்துறை அமைச்சர் மிலிந்த மொறகொடவுக்கும் இடையே மோதல் ஏற்பட்டுள்ளதைத் தொடர்ந்து மிலிந்தவின் இந்தியப் பயணம் இரத்துச் செய்யப்பட்டுள்ளது.அமெரிக்கப் பயணம் மேற்கொண்டிருக்கும் மிலிந்த மொறகொட இலங்கை திரும்பும் வழியில் இந்தியப் பயணம் மேற்கொள்ளத் திட்டமிட்டிருந்தார்.

இந்திய பிரதமர் மன்மோகன்சிங்கை நேரில் சந்தித்து அரசாங்கத்தின் நிலைப்பாடுகளை விளக்கம் அளிக்க மிலிந்தவுக்கு தனது சிறப்புப் பிரதிநிதி என்ற ஒப்புதலையும் மகிந்த கொடுத்திருந்தார்.

ஆனால் மிலிந்தவை மகிந்தவின் சிறப்புப் பிரதிநிதியாக ஒப்புதல் அளிக்க வெளிவிவகார அமைச்சர் ரோகித போகல்லாகம எதிர்ப்புத் தெரிவித்துள்ளதாகவும் அதனால் மிலிந்தவின் இந்தியப் பயணம் இரத்துச் செய்யப்பட உள்ளதாகவும் கொழும்புச் செய்திகள் தெரிவிக்கின்றன. (எ-1)

## கும்பாபிஷேகம்

வட்டுக்கோட்டை அருள்மிகு கண்ணகாம்பிகா சமேத கண்ணலிங்கேஸ்வரர் ஆலயத்தில் புதிதாக நிர்மாணிக்கப்பட்ட தட்சணா மூர்த்தி ஆலய கும்பாபிஷேகம் எதிர்வரும் 15ஆம் திகதி காலை 11மணி முதல் 11.55 மணி வரை இடம்பெற உள்ளது.முதல் நாள் அன்று காலை 8மணி முதல் பிற்பகல் 2 மணிவரை எண்ணெய் காப்பு சாத்தும் வைபவம் இடம்பெறும். (ச-5)

## பேச்சுக்களை மீள ஆரம்பிக்க...

கருத்துத் தெரிவித்தபோதே அவர் இதனைத் தெரிவித்துள்ளார். அவர் மேலும் கூறியதாவது,

அரசுடனும் விடுதலைப்புலிகளுடனும் நோர்வேத் தூதரகம் வழமையாக நடத்தும் மாதாந்த சந்திப்புக்களில் ஒன்றாகவே நேற்றைய சந்திப்பு நடைபெற்றது. பேச்சுவார்த்தையை மீளத் தொடங்க வேண்டும் என்பதில் நோர்வே ஆர்வமாகவுள்ளது.

விடுதலைப்புலிகளும் இலங்கை அரசாங்கமும் மீண்டும் பேச்சுக்களைத் தொடங்க வேண்டும் என்பதுதான் கடந்த ஜூன் 26 ஆம் திகதி நோர்வேத் தலைநகர் ஒஸ்லோவில் கூடிய இணைத் தலைமை நாடுகளின் விருப்பம்.

எதிர்வரும் 15 நாள்களில் நோர்வேயின் புதிய தூதுவர் பதவி ஏற்பார் என்றார் அவர். இலங்கையில் தற்போதைய அரசியல் சூழ்நிலை, இலங்கை தொடர்பான அனைத்துலக நாடுகளின் நிலை, பாதுகாப்பு, மனிதாபிமானப் பணி மற்றும் மனித உரிமை விவகாரம் தொடர்பாக இச் சந்திப்பில் கலந்துரையாடப்பட்டதாகத் தெரிகின்றது. (எ-5)

## விடுதலைப்...

ந.செல்வி மற்றும் நோர்வேத் தூதரகச் செயலாளர், துணைச்செயலாளர் ஆகியோரும் உடனிருந்தனர்.

3 மாதங்களுக்குப் பின்னர் தமிழீழ விடுதலைப்புலிகளுடன் ஹான்ஸ் பிரட்ஸ்கர் ஆலோசனை நடத்தியுள்ளார். எதிர்வரும் மாதம் நோர்வேத் தூதுவர் பணியிலிருந்து ஓய்வு பெறும் அவர் நோர்வே திரும்புகின்றார். (ச-5)

## கடத்தப்பட்ட...

பட்டவராவார்.

நேற்று முன்தினம் நள்ளிரவு அவரின் வீட்டுக்குச் சென்ற ஆயுததாரிகள் கோடரியினால் கதவைக் கொத்தி உட்புகுந்து குறித்த குடும்பஸ்தரைக் கடத்திச் சென்றதாகவும் பின்னர் கல்வியங்காடு ஆடியபாதம் வீதியில் கைகள் கட்டப்பட்ட நிலையில் சுட்டுக்காயங்களுடனும் அடிகாயங்களுடனும் அவரது உடல் காணப்பட்டதாக விசாரணைகளில் தெரிய வந்துள்ளது.

சம்பவம் தொடர்பாக விசாரணைகளை மேற்கொண்ட யாழ்.பதில் நீதிவான் மு.திருநாவுக்கரசு பிரேத பரிசோதனைக்குட்படுத்துமாறு கோப்பாய்ப் பொலிஸாருக்கு உத்தரவிட்டார். (ச-5)

## முல்லைத்தீவில்...

மீது நேற்றுப் பிற்பகல் 3.30 மணியளவில் கிபீர் விமானங்கள் குண்டுத் தாக்குதலை நடத்தின.

குண்டுகள் வாடிகள் மீதும் அதன் பகுதிகள் மீதும் வீழ்ந்து வெடித்துள்ளன. இதன்போது அப்பகுதியில் தொழில் நிமிர்த்தம் நின்ற பொதுமக்களும் அவர்களின் குடும்பத்தினரும் தாக்குதலுக்குள்ளாகினர்.

வான்படையின் மிலேச்சத்தனமான தாக்குதலில் பாடசாலை மாணவனான ஆனந்தன் செல்வா (வயது-15), சிறிபாலசுப்பிரமணியம் காந்தமலர்(வயது-5) ஆகியோ ரே சம்பவ இடத்திலேயே கொல்லப்பட்டனர். (ச-5)

## தொப்பிக்கலவிலுள்ள மக்களை...

ஆனால் அது உண்மையல்ல. ஏனென்றால் எமக்கு கடந்த 24 ஆண்டு கால அனுபவம் இருக்கின்றது. கெரில்லா போர் அனுபவம் இருக்கின்றது.

இந்தப் பகுதியில் நாங்கள் பல வாரங்களுக்கு' முன்பாகவே கெரில்லா போர் முறைக்கு எமது போர் யுத்தியை மாற்றி விட்டோம். கிழக்கைப் பொறுத்தவரை நிலப்பரப்பைப் பிடிப்பது என்பது எங்களுக்கு அவ்வளவு முக்கியமானதல்ல.

நிச்சயமாக இலங்கைப் படையினர் சில பகுதிகளில் ஆதிக்கம் செலுத்துகின்றனர். அவர்கள் பெரும் நிலப்பரப்பைத் தமது கட்டுப்பாட்டிற்குள் கொண்டு வந்துள்ளார்கள். ஒரு பெரும் விஸ்தீரணமான நிலப்பரப்பில் துருப்புக்களை நிலைநிறுத்துவது என்பது ஒரு விடயம்.

ஆனால் அதேசமயம் மோதல்கள் நடக்காமல் கட்டுப்பாட்டில் வைத்துக் கொள்ளல் என்பது வேறு ஒரு விடயம். எனவே எதிர்காலத்தில் எங்களுக்கும் அவர்களுக்கும் என்ன நடக்கப்போகின்றது என்பதைப் பொறுத்திருந்து பார்ப்போம் என்றார்.

*கேள்வி:-* கிழக்கே இலங்கை இராணுவத்தின் முன்னகர்வுகள் என்பன விடுதலைப் புலிகளுக்கு ஒரு பின்னடைவுதான் என ஏற்றுக் கொள்கின்றீர்களா?

*பதில்:-* ஆம். ஒரு வகையில் உண்மை. ஏனென்றால் அவர்கள் பெரும் நிலப்பரப்பைக் கட்டுப்பாட்டிற்குள் கொண்டு வந்திருக்கின்றார்கள். ஒரு வகையில் அதாவது எமது மக்களை இந்த இடத்திலுள்ள இராணுவத்தின் கட்டுப்பாட்டிலிருந்து எங்களால் மீட்க முடியவில்லை என்ற வகையில் இது ஒரு பின்னடைவுதான் என்றார்.

*கேள்வி:-* கிளிநொச்சியை மையமாகக் கொண்டு நீங்கள் ஒரு குட்டி அரசை நடத்தி வருகின்றீர்கள். அரசாங்கம் அதன் இராணுவ நோக்கம் அதாவது உங்களை இராணுவ ரீதியாகத் தோற்கடிப்பது என்ற நோக்கத்தை எட்ட வேண்டும்என்றால் அவர்கள் உங்களைத் தொடர்ந்து தாக்க வேண்டும் இல்லையா? இது உங்களுக்குக் கவலை தரவில்லையா?

*பதில்:-* தொடர்ச்சியாக வந்த கொழும்பு அரசாங்கங்கள் இதனை முயற்சி செய்தன. ஆனால் அனைவரும் இதில் தோல்வி அடைந்து விட்டனர். ஜே.ஆர்.ஜெயவர்த்தனா முதல் சந்திரிகா குமாரதுங்க வரை அனைவரும் இதில் தோற்றுப் போய்விட்டார்கள்.

தற்போது இது ராஜபக்ஷவின் தருணம். அவர் தனது முயற்சியைச் செய்கின்றார். இராணுவ ரீதியாக ஒரு முன்னேற்றகரமான நிலைமை என்று நான் இதனைக் கருதவில்லை. ஏனென்றால் நீங்கள் ஒரு பகுதியின் கட்டுப்பாட்டைப்பெற வேண்டுமென்றால் அடுத்த பகுதியின் கட்டுப்பாட்டை இழக்க வேண்டும்.

நீங்கள் முட்டையையும் வைத்துக் கொண்டு அதேநேரத்தில் அதையே ஆம்லட்டாகவும் நீங்கள் சாப்பிட முடியாது. ஆகவே அவர்கள் ஒரு வகையில் செயற்பட முயற்சிக்கின்றபொழுது அதற்கு ஏற்ப நாங்கள் எங்களது பாணியை, யுத்தியை மாற்றுவோம் என்றார்.

*கேள்வி:-* யுத்தியை மாற்றிக் கொள்வோம் என்றால்...?

*பதில்:-* எமது யுத்தி மற்றும் பாணி என்று கூறுவதானால் ஒரு பிராந்தியத்தை பொறுத்தவரையில் நாங்கள் எதிரியை மரபு ரீதியாகவோ அல்லது மரபு சாரா முறையிலோ எதிர் கொள்ள முடியும்.

எங்களிடம் இருக்கின்ற வசதியைப் பொறுத்தே ஏதோ ஒரு வகையில் செயற்பட முடியும். மேற்கொள்ளக் கூடிய யுத்திகளின் அடிப்படையில் நிலைமைகள் அனுமதிக்கின்ற வகையில் நாம் எமது பாணியை தீர்மானிக்கலாம் என்றார் இளந்திரையன். (ச)

## நிலப்பரப்பைக் கைப்பற்றுவதன்...

ஆளுகைப் பிரதேசங்கள் மாற்றமடைந்து வந்துள்ளதாகவும் கிழக்கை யோ அல்லது வடக்கையோ கைப்பற்றுவ தன் மூலம் பிரச்சினைக்குத் தீர்வு காணமுடி யாது என்றும் சுட்டிக்காட்டியுள்ளது.

70 ஆயிரத்துக்கும் அதிகமான மக்கள் கொல்லப்பட்டு இலட்சக்கணக்கானவர்கள் அகதிகளாக்கப்பட்டுள்ள நிலையில் பிரதேசங்களைக் கைப்பற்றுவதும் அதனைத் தக்க வைப்பதும் நிலையான சமாதானத்தை ஏற்படுத்த உதவாது என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இருதரப்பிலும் ஏற்பட்டுள்ள இழப்புக்கள் குறித்து சுயாதீனமான தகவல்களைப் பெற முடியாதிருப்பதாகவும் ரொய்ட்டர் வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை படைகள் தொப்பிக்கலவைக் கைப்பற்றும் படை நடவடிக்கையில் விடுதலைப்புலிகளின் உறுப்பினர்கள் பலர் உயிரிழந்துள்ளதாகவும் அவர்களின் ஆயுதங்கள் பலவற்றைத் தாங்கள் கைப்பற்றியுள்ளதாகவும் அறிவித்து வருகின்றபோதிலும் அதற்குரிய ஆதாரங்களை இதுவரை அரசாங்கம் வெளியிடவில்லை என்றும் இது அரசாங்கத்தின் பிரசார நடவடிக்கைகளுக்கு பாரிய பின்னடைவை ஏற்படுத்தியுள்ளதாக தென்னிலங்கையின் பாதுகாப்பு விவகாரங்கள் தொடர்பான ஆய்வாளர் ஒருவர் கருத்து வெளியிட்டுள்ளார். (எ-1)

## கிழக்கு மாகாணம் முழுவதும்...

தாக்குதல் சம்பவம் தொடர்பாக ஜனாதிபதி செயலகம் நேற்று வெளியிட்டுள்ள அறிக்கை வருமாறு,

குடும்பிமலைப் பிரதேசத்தின்முக்கிய முகாம் நேற்றுக் காலை படையினரிடம் வீழ்ச்சியடைந்தது. இது மூன்று மாத கால இராணுவ நடவடிக்கையின் அடைவாகும். இந்த வெற்றியுடன் இராணுவத்தினர் கிழக்கு மாகாணம் முழுவதையும் தமது முழுக் கட்டுப்பாட்டிற்குள் கொண்டு வந்துள்ளனர்.

நேற்றுக் காலை இராணுவத்தினர் மேற்கொண்ட தீவிர தாக்குதலையடுத்துத் தமது கிழக்கின் இறுதிமுகாமைக் கைவிட்டுக் கிழக்குப் பிரதேச காட்டுக்குள் புலிகள் தப்பியோடினர்.

அவர்களைத் தேடிக் கண்டுபிடிக்கும் பணியில் இராணுவத்தினர் ஈடுபட்டுள்ளனர். இராணுவத்தினர் நடத்திய தேடுதல் நடவடிக்கையின்போது புலிகளால் கைவிடப்பட்ட வாகனங்கள் மற்றும் ஆயுதங்களையும் படையினர் கைப்பற்றியுள்ளனர்.

120 மி.மீ. மோட்டார் 2, டௌஸர் வாகனம் ஒன்று, டபிள் கைப் வானம்2 , உலர் உணவு நிரப்பட்ட டிரைக்டர்கள் 5, மோட்டார் சைக்கிள்கள் 5 மற்றும் ஹண்டர் ரக வாகனம் 5 ஆகிய கைப்பற்றப்பட்டுள்ளதாக ஜனாதிபதி செயலக செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை கொழும்பில் இராணுவப் பேச்சாளர் பிரிகேடியர் பிரசாத் சமரசிங்க நேற்றுக்காலை ஊடகவியலாளர்களிடம் இது குறித்துக் கூறியதாவது,

குடும்பிமலையிலிருந்த புலிகளின்மிகப் பெரிய முகாம்களை இராணுவத்தினர் தமது கட்டுப்பாட்டிற்குள் கொண்டு வந்துள்ளனர். சிறிய எண்ணிக்கையிலான புலிகள் தற்போது குடும்பிமலையின் மேற்குப் பகுதிக்குத் தப்பியுள்ளனர்.

அவர்களைத் தேடும் நடவடிக்கை தற்போது நடைபெறுகின்றது. புலிகளின் முகாம்களிலிருந்த ஆயுதங்களையும் இராணுவத்தினர் கைப்பற்றியுள்ளனர் என்றார்.

பாதுகாப்பு அமைச்சு நேற்றுக காலை வெளியிட்ட அறிக்கையில் குடும்பிமலையை சில மணி நேரத்திற்கு முன்னர் கொமாண்டோக்களும் இராணுவத்தினரும் மீட்டுள்ளனர். இந்த வெற்றியுடன் கிழக்கு மாகாணத்தில் புலிகளுக்கு எந்த முகாம்களும் இல்லை.

13 வருடங்களுக்குப் பின்னர் முதன் முறையாக கிழக்கு மாகாணம் முழுவதும் இராணுவத்தினர் வசமாகியுள்ளது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச)

## இந்தியாவின்...

வாழ்க்கைக்கு உகந்ததல்ல. இந்த விடயத்தில் இந்தியாவின்உதவி அவசரத் தேவையாகும்.

தேசிய இனப்பிரச்சினை தீவிரமடைந்துள்ள நிலையில் இந்தியாவின் உதவி பெரிய சாதகமாக அமையும் என்பதே மலையக மக்கள் முன்னணியின் கருத்தாகும்.

பிராந்திய வல்லரசாக மட்டுமன்றி உலக வல்லரசு என்ற அந்தஸ்தை நோக்கிச் சென்று கொண்டிருக்கும்இந்தியாவுக்குத் தனது அண்டைநாடான இலங்கையைப் பொறுத்தவரை ஒரு பிரதான கடமையுள்ளது.

இலங்கை இனப்பிரச்சினையில் இந்தியாவுக்கு நீண்டகால அனுபவம் உண்டு. அனைவரது கோரிக்கைகளையும் கருத்தில் கொண்டு நியாயமான தீர்வுத் திட்டம் ஒன்றை இந்தியா முன்வைக்க வேண்டும். இரு சாராரும் அதனைக் கேட்டு நடக்கின்ற கடமையும் இருக்கின்றது. இதையே இலங்கையில் பல தரப்பினரும் எதிர்பார்க்கின்றனர் என்றார். (எ-5)


வாருங்கள்!

பிரவேசம் இலவசம்!!

HUDEC

CARITAS

'எங்கள் வாழ்வும், எங்கள் வளமும்'

கியூடெக் - கரித்தாஸ்

விற்பனைக் கண்காட்சியும் மகளிர் ஆண்டு விழாவும்

இடம்: கியூடெக் வளாகம்

காலம்: 13, 14 ஆடி - 2007

நேரம் : 9.00 முதல் 4.30 வரை (இரண்டு தினங்கள்)

பிரதம விருந்தினர் : மேதகு ஆயர் தோமஸ் சௌந்தரநாயகம் ஆண்டகை

சிறப்பு விருந்தினர்கள் : திரு.கே.கணேஸ் (யாழ்.அரச அதிபர்)

திருமதி தைவினி பொன்சேகா (தேசிய ஊக்குவிப்பு திட்ட இணைப்பாளர், கரித்தாஸ் கொழும்பு)

ஒரே குடையின் கீழ் மனித வலுவின் வெளிப்பாடுகளை எடுத்துரைக்கும் உயிர்ப்பூட்டல், மகளிர், சமாதான குழுக்களின் கண்காட்சியும் விற்பனையும்

மலர் வெளியீடு, சேமிப்புப் பதிவேடு வழங்கல், விவசாய கண்காட்சி, முந்திரிகை வைன் அறிமுகமும் கடல்வள கண்காட்சி, இரத்ததானம் பற்றிய விழிப்புணர்வு, மிதிவெடி விழிப்பூட்டல் (வெண்புறா அமைப்பு) மது ஒழிப்பு விழிப்பூட்டல் (அஸ்றியா நிறுவனம்), 'நான்' உளவியல் சஞ்சிகை விற்பனை, சிறுவர் பகுதி, விற்பனைப் பகுதிகள் யாவற்றிலும்

பங்குகொண்டு பயனடைய வாருங்கள் (c-217)



### தேவை

பிஸ்கட், கேக் செய்யக் கூடிய பெண் பிள்ளைகள் தேவை. சம்பளம் பேசித் தீர்மானிக்கப்படும்.

சீலன் பேக் ஹவுஸ்
நவாலி தெற்கு,
நவாலி
(c-202)



### தேவை

லேலன் டீசல் எஞ்சின் வேலை செய்யக் கூடிய மெக்கானிக்கும் ரிங்கர் வேலை செய்யக் கூடிய உதவியாட்களும் தேவை.

சிவலிங்கம் மோட்டோர்ஸ்
77, மானிப்பாய் வீதி,
யாழ்ப்பாணம். (180)


இப்பத்திரிகை வலம்புரி அன்.கோ.ஸ்தாபனத்தாரால் இல.03, இரண்டாம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 12.07.2007 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.